
குங்குமச்
சிமிழ்
1-6-2009
விலை ரூ.4
என்னுயிர்
நீதானே...!
லட்சுமி பிரபா



# முழு நாவல்

நேர்த்தியாய் அளவு வைத்துக் கோடு போட்டது போல் மழை, நேர்க் கோடாய் பூமியைத் துளைத்துக் கொண்டிருந்தது.

இட்லி குக்கரை அடுப்பிலேற்றி விட்டு தக்காளி சட்னியை




மிக்ஸியில் அரைத்து முடித்த பவ்யா... ஈரக் கைகளைத் துவாலையில் துடைத்துக் கொண்டே வாசலுக்கு வந்தாள்.

மழை ஆவேசமாய் பெய்தது. சுழன்றடித்த காற்றில் மரங்கள் பேயாட்டம் போட்டன. தோட்டத்துச் செடிகள் குளிருக்கு நடுங்கி, ஒன்றுடன் ஒன்று சாய்ந்து ஒட்டிக் கொண்டிருந்தன.

“அம்மா ! எனக்கு ரொம்ப பயமாயிருக்கும்மா” மூன்று வயது குழந்தை தீபிகா ஓடி வந்து அவளது இடுப்பைக் கட்டிக் கொண்டாள்.

குழந்தையைத் தூக்கி வாரி அணைத்துக் கொண்டாள் பவ்யா.

அதி பயங்கர வெளிச்சத்தோடு மின்னலொன்று வானில் முகம் காட்டிவிட்டுப் போனது. அடுத்த சில கணங்களில் ‘டம டம’ வென்று இடிச் சத்தம்.

தாயின் கழுத்தை இறுகக் கட்டியபடி அவளது தோளில் முகம் புதைத்துக் கொண்ட குழந்தையின் முதுகை வாத்சல்யமாய் தட்டிக் கொடுத்தாள் பவ்யா.

"தீபி குட்டிக்கு எதுக்கு பயமாம்? மழை பெய்தால் தானே பூமி செழிக்கும். மழை பெய்யலேன்னா... தோட்டத்துச் செடிகள் எல்லாம் காய்ஞ்சு கருவாடா போயிடுமே?

போன வாரம் எப்படி வாடிக் கிடந்த செடிங்க... இப்போ மழை பெய்யவும்... தளதளன்னு குஷியா மழையில குளிச்சுட்டிருக்கு. பாரேன்!"

"ஊகூம்... இடிச் சத்தம் கேட்டா எனக்கு பயம். மழை வேணாம்மா... போதும். அப்பா எப்போ வருவாரு?"

கடந்த மூன்று நாட்களாகத் தொடர்ந்து பெய்த கோடை மழை குழந்தைக்கு சலிப்பை ஏற்படுத்தி விட்டது.

வெளியில் எங்கும் தலைகாட்ட முடியவில்லை. நான்கு சுவர்களுக்குள் வீட்டிற்குள்ளேயே அடைபட்டுக் கிடக்கிறோம் என்று குழந்தை வெறுத்துப் போய் விட்டாள் போலும்.

பவ்யாவின் கணவன் நரேந்திரன் ஊரில் இருந்திருந்தால்... இவள் மறுப்பைக் காதிலேயே போட்டுக் கொள்ள மாட்டான்.

தீபு குட்டிக்கு சின்ன ரெயின் கோட் அணிவித்து காரில் அருகில் அமரவைத்துக் கொண்டு... ஷாப்பிங் காம்ப்ளெக்ஸிற்குச் சென்று மெல்ல வேடிக்கை காட்டி... குழந்தைக்குப் பிடித்த சாக்லெட், பிஸ்கெட் பாக்கெட்டுகளை வாங்கிக்கொண்டு... அந்த ஏரியாவை ஒருமுறை வலம் வந்து விடுவான்.

"என்னங்க இது? மழை பெய்யறப்போ கூட அவளை வெளியில கூட்டிட்டுப் போகணுமா?

குழந்தைக்கு சளி, ஜுரம்னு ஏதாச்சும் வந்துட்டா என்ன பண்றதாம்?" ஆதங்கப் படுவாள் பவ்யா.

"ஏன் வீணா பதட்டப்படறே? தீபுகுட்டிக்கு ரெயின் கோட் மாட்டியிருக்கேன். அவளை எங்கேயும் இறக்கியே விடலை. நான்தான் தூக்கியே வச்சுட்டிருக்கேனே?

குழந்தைக்கு போரடிச்சு அவ முகம் எப்படி வாடிக் கிடந்துச்சு. இப்போ பாரேன். கலகலன்னு ஆயிட்டா... வீட்டுக்குள்ளேயே அடைஞ்சு கிடக்கக்கூடாது.

குழந்தையை வெளியில் அழைச்சுட்டுப் போனாத்தான்... மைண்ட் ஃப்ரீயா இருக்கும். நிறைய விஷயங்களை அது அப்சர்வ் பண்ணிக்கும்.

போன வாரம் ஜி.கே.புக் வாங்கிக் குடுத்தேனே? கலர்ப் படங்களைக் காட்டி சொல்லிக் கொடுத்ததும்... அத்தனை 'அனிமல்ஸை'யும் எவ்ளோ அழகா ஐடென்டி ஃபை பண்ணி கரெக்டா பேர் சொல்றா பாத்தியா?

குழந்தைக்கு நான் அப்பா... எனக்கும் உன்னை மாதிரியே அவளோட நலன்லே அக்கறையும் கவனமும் இருக்கு. வீணா கவலைப்படாதே"

மென்மையான குரலில் பேசி, அவளது வாயை அடைத்து விடுவான் நரேந்திரன்.

சாயந்தரம் அலுவலகத்தை விட்டு வீட்டிற்கு வந்துவிட்டால்... சதா தீபிகாவுடனேயே பொழுதைக் கழிப்பான் நரேந்திரன்.

குழந்தைகள் கண்டு மகிழக்கூடிய 'சி.டி'யை வாங்கி வந்து போட்டுக் காட்டுவான்.

"அதோ பாரு... காட்டு யானை! தும்பிக்கையைத் தூக்கிக்கிட்டு தண்ணியில எப்படி முங்கிக் குளிக்குது. பார்த்தியா?" என்பான்.

குழந்தைக்கு குஷி பிய்த்துக் கொண்டு போகும். கைகளைத் தட்டி ஆர்ப்பரிப்பாள்.

சில நாட்களில்... "தீபு! அம்மாகிட்ட நைட்டுக்கு டிபன் எதுவும் செய்ய வேணாம்னு சொல்லிடு ராஜாத்தி. இன்னிக்கு பீச்சுக்குப் போயிட்டு... நல்லா காத்தாட 'வாக்' பண்ணிட்டு அப்படியே ஹோட்டல்லே சாப்பிட்டுட்டு வந்துடலாம்" என்பான்.

தீபிகாவுக்கு பவ்யாவை விட நரேந்திரனிடம் தான் அதிக ஒட்டுதல்!

திருமணமாகி மூன்று ஆண்டுகள் வரை அவர்களுக்கு குழந்தை பாக்கியம் கிட்டவில்லை.

நாளாக ஆக... இருவருக்குமே குழந்தையைக் கொஞ்சி மகிழ வேண்டும் என்ற ஏக்கம் ஆட்டிப் படைக்கத் தொடங்கியது.

"பவ்யா! இனியும் தாமதிக்கக்கூடாது. சாயந்தரம் ரெடியா இரு. ஆபிஸை விட்டு வந்ததும் நாம்ப டாக்டரைப் பார்க்கப் போகலாம்.

ரெண்டு பேரையும் டெஸ்ட் பண்ணி என்ன குறைன்னு பார்த்துட்டு... ட்ரீட்மெண்ட் எடுத்துக்கிட்டா கூடிய விரைவில் நமக்கும் ஒரு குழந்தை கிடைச்சுடும். சரியா?" அவளது கன்னத்தை இதமாய் தட்டினான்.

“எ... என்னங்க! முதல்லே டாக்டர் என்னை மட்டும் ‘செக்கப்’ செய்து ட்ரீட்மெண்ட் தரட்டும். டாக்டரோட ஒபினியன் என்னன்னு பார்ப்போம். குறை இருந்தா அது... என்கிட்ட தான் இருக்கும்.

உங்களுக்கு ஒரு குறையும் இருக்காது. நீங்க என்னத்துக்கு...?”

அவள் பேசி முடிக்கும் முன் இடை புகுந்தான் நரேந்திரன்.

“மக்கு... குறை ரெண்டு பேர்கிட்டேயும் இருக்க வாய்ப்பிருக்கு. ஆரம்பத்துலேயே ரெண்டு பேருக்கும் டெஸ்ட் எடுத்துப் பார்த்துட்டா...

டாக்டர் ஈஸியா சிகிச்சையை ஆரம்பிச்சுடுவாங்க இல்லையா?

குறை யார்கிட்டே இருந்தாலும் சரி... அதுக்காக நாம இடிஞ்சு போயிடக்கூடாது.

அனாதை குழந்தை ஒண்ணை தத்து எடுத்து வளர்த்துக்கலாம். எதுக்கும் நாம்ப தயாரா இருக்கணும். சரியா பவ்யா?”

அவளது அழகிய நெற்றியில் வந்து புரண்ட முடிக்கற்றையை... அவன் ஆதரமாக ஒதுக்கி விட்டபடி பேசினான்.

‘என்ன ஒரு பெருந்தன்மை? எப்பேர்ப்பட்ட விசாலமான மனம்... அவனது அன்பில்.. கரிசனத்தில்... பரிவில்... அப்படியே நெக்குருகிப் போனாள் பவ்யா.

பவ்யா பயந்தது போல் ஒன்றும் ஆகவில்லை. மூன்று மாதங்கள் தொடர்ந்து சிகிச்சை எடுத்துக் கொண்டதன் பலனாக... அவள் கருவுற்றாள்.

குழந்தை தீபிகாவுக்கு அவன் அன்பான தந்தை மட்டுமல்ல.. பவ்யாவுக்கு அன்பான அனுசரணையான கணவனும் கூட...

திருமணமானதிலிருந்து அவளைப் பூப்போல் தான் பார்த்து கொண்டான் நரேந்திரன். தங்கத் தட்டில் வைத்து தாங்காத குறைதான்!

அப்படிப்பட்டவனுக்கு மனைவி தன் குழந்தைக்குத் தாயாகி விட்டாள் என்று தெரிந்ததும்... உள்ளங்கையில் வைத்து தாங்கத் தான் செய்தான்.

பவ்யாவின் முகம் இலேசாக சுணங்கிக் கிடந்தால் போதும்... பதறிப் போய் விடுவான் நரேந்திரன்.

அவளுக்கு நினைவு தெரிந்து... ஒருநாள்கூட அவன் எரிந்து

விழுந்ததில்லை... புருவங்கள் நெரிய முகம் சுளித்தது கூட இல்லை.

‘இப்பேர்ப்பட்டவர் எனக்கு கணவராய் கிடைக்க... நான் நூறு ஜென்மங்கள் தவம் செய்திருக்க வேண்டுமே!

நான் பாக்கியசாலி தான்... ஆனால் அவர்?

அவருடைய மனைவி என்னும் ஸ்தானத்தில் இருப்பதற்கு.. நான் தகுதியுடைவள் தானா?

அந்த அருகதை எனக்கு இல்லையே?’

பவ்யாவின் உள் மனம் வழக்கம் போல் புலம்பியது.

நெஞ்சில் ‘நறுக்’ என்று நெருஞ்சி முள் குத்தியது.

அழகிய விசாலமான விழிகளில் ‘குபுக்’ என்று கண்ணீர் எட்டிப் பார்த்தது.

## 2

“அம்...மா...! சொல்லும்மா... அப்பா எப்போ வருவாரு?” குழந்தை தீபிகா தன் பிஞ்சுக் கரங்களால் பவ்யாவின் தாடையைப் பிடித்தபடி... ஏக்கம் தொனித்த குரலில் நச்சரித்தாள்.

“என்னடா கண்ணா! அப்பா ஊருக்குப் போயி நாலு நாள் கூட ஆகலை.. அதுக்குள்ளே அம்மாவைப் படுத்துறியே? காலையில கூட ஃபோன்லே அப்பாகிட்டே பேசினியே?

‘சமர்த்தா இருக்கணும். எதுக்கும் அடம் பண்ணாம அழாம நச்சரிக்காம இருக்கணும்’னு அப்பா உன்கிட்ட சொன்னார் இல்லையா?

‘சரிப்பா... ரொம்ப சமத்துப் பொண்ணா இருக்கேன் அப்பா’ன்னு சொன்னியே? அப்புறம் என்ன?

அப்பா கம்பெனி சார்பா ப்ராஜெக்ட் விஷயமா சிங்கப்பூருக்குப் போயிருக்காரு... அது வெளிநாடு! நம்ம ஊர்லே இருந்து ரொம்ப தூரத்துல இருக்கு.

### யோசனை

பெண்கள் இரவில் உறங்கும் போது பெரிய தலையணை வைத்துக் கொள்ளக் கூடாது. அப்படி வைத்துக் கொண்டால் கழுத்து தடித்து அவலட்சணமாகிவிடும். பெண்கள் சிறிய, மென்மையான தலையணைகளையே உபயோகிக்க வேண்டும்.

மூக்கின் ஓரங்களில் உள்ள கருப்புக்கு தினமும் ஆவிபிடித்து பஞ்சால் மூக்கின் ஓரங்களை துடைத்து எடுப்பது பலன் தரும்.

– ஹரிஹரன்

நடிகை கங்கனா ரணாவத் 'கைட்ஸ்' படத்தின் படப்பிடிப்பிற்கு பின்லாந்து சென்றிருந்தார். அப்போது அவரது அழகிய தோற்றத்தைப் பார்த்த ஹாலிவுட் தயாரிப்பாளர்கள் ஆங்கிலப் படங்களில் நடிக்க இவருக்கு அழைப்பு விடுத்தனராம். நடிகை இந்த நல்ல வாய்ப்பை நழுவவிடாமல் ஹாலிவுட் படங்களில் நடிக்க முடிவு செய்துள்ளாராம்.

- க.ரவீந்திரன்



போன வேலை முடிஞ்சதும் அப்பா அடுத்த நிமிஷமே உன்னைப் பார்க்க ஃபிளைட்லே பறந்து வந்துட மாட்டாரா?

அதான் தினமும் உன்கிட்ட ஃபோன்லே பேசறாரு. பாப்பாவைக் கொஞ்சறாரு. அப்புறம் என்ன? அதான் அம்மா உங்கிட்டயே இருக்கேன்ல..." குழந்தையின் பட்டுக் கன்னத்தில் முத்தம் இட்டாள் பவ்யா.

"போம்மா! அப்பாவை வெளி ஊருக்கும் வெளி நாட்டுக்கும் போகாம இங்கேயே இருக்கச் சொல்லும்மா.

அப்பப்போ என்னை விட்டுட்டு அவர் போறது எனக்கு பிடிக்கலைம்மா... அப்பா எப்பவும் நம்மகூடவே இருக்கணும் அம்மா"

குழந்தையின் கண்கள் ஏகத்திற்கும் கலங்கின.

"அப்பா வீட்டோடவே இருந்தா எப்படி சம்பாதிக்கிறதாம்? நல்லா சம்பாதிச்சால் தானே பாப்பா ஆசைப் பட்டதையெல்லாம் வாங்கித் தர முடியும்?

உன்னை நல்லா வளர்த்து பெரிய படிப்பெல்லாம் படிக்க வைக்க வேணாமா கண்ணு!

நீ புத்திசாலி குழந்தையாச்சே? அப்பா வேலையை முடிச்சுட்டு சிங்கப்பூர்லே இருந்து வரும்போது... உனக்காக நிறைய டாய்ஸ் வாங்கிட்டு வருவாரு பாரேன்!

சமத்து! என் பட்டு இல்ல? இப்போ அம்மா இட்லி ஊட்டி விடுவேனாம். அடம் பண்ணாம சாப்பிடணும். உனக்குப் பிடிச்ச மாதிரி காரம் அதிகமில்லாம நிறைய எண்ணெய் விட்டு தக்காளி சட்னி வச்சிருக்கேன். சாப்பிடறியா செல்லம்?"

குழந்தை அரை மனதாக தலையை மெல்ல ஆட்டியதும்... அவசரமாய் அடுக்களைக்குள் புகுந்தாள் பவ்யா.

நரேந்திரன் ஒரு கம்ப்யூட்டர் என்ஜினீயர். பெரிய நிறுவனத்தில் நல்ல பதவியில் அமர்ந்து கொண்டு கை நிறைய சம்பாதித்தான்.

அவனது திறமைக்கு விரைவில் பதவி உயர்வு கிடைத்ததோடு... அடிக்கடி பிராஜெக்ட் சம்பந்தமாக வெளிநாடுகளுக்கும் பறந்து கொண்டிருந்தான்.

அவனுக்கு அம்மா அப்பா உடன்பிறந்தவர்கள் என்று யாரும் கிடையாது.

சிறு வயதிலிருந்து சித்தப்பாவின் நிழலில் அண்டி வாழ்ந்தவன். மனைவியை இழந்து தனிக்கட்டையாக வாழந்த சித்தப்பா பரசுராமன் அவனை நன்கு படிக்க வைத்துவிட்டார்.

அவன் கல்லூரிப் படிப்பை முடித்து நல்ல வேலையில் அமர்ந்ததுதான் தாமதம்... இதற்காகவே இத்தனை காலம் காத்திருந்தவர் போல் பொசுக்கென்று மாரடைப்பில் காலமாகிவிட்டார் பரசுராமன்.

சென்னையை அடுத்த புறநகர்ப் பகுதியில் உள்ள குன்றத்தூரில் தான் அவர்களது பரம்பரை வீடு அமைந்திருந்தது.

பெரிய காம்பவுண்ட் கேட்டைத் தாண்டினால் அழகான தோட்டம்... தோட்டத்திற்கு மத்தியில் அமைந்திருந்த அந்தக் காலத்து வீட்டை முழுவதும் இடித்துவிட மனமின்றி நவீனமுறையில் சில மாற்றங்களைச் செய்து... அம்சமாக மாற்றிவிட்டிருந்தான் நரேந்திரன். நான்கு பக்க தாழ்வாரங்களுடன் கூடிய களையான பெரிய வீடு!

விடுமுறை நாட்களில் தோட்டத்தைக் கண்ணும் கருத்துமாகப் பராமரிப்பான். பவ்யாவுக்கும் செடிகள் வளர்ப்பதில் மிகவும் ஆர்வம்தான்.

"பவ்யா! எல்லா வீடுகளும் ஒரே அச்சுதான்... முன்னாடி அழகான

மலர்ச் செடிகள். வீட்டின் இரு மருங்கிலும் தென்னை, மா, எலுமிச்ச மரங்கள்... பின்புறம் காய்கறித் தோட்டம், பின்புறத்தைப் பார்த்தாலே கவர்ச்சி குறைந்து போய் விடுது... இல்லையா?

நம் வீடு அப்படி இருக்கக்கூடாது. எந்தப் பக்கத்திலிருந்து பார்த்தாலும் அதுதான் வாயிலோ என்று தோன்ற வேணும்" என்று தீவிரமாய் ஆலோசித்தான்.

வீட்டின் நான்கு பக்கத்துக்கு தாழ்வாரங்களின் மேல் தளத்திலிருந்து பூந்தொட்டிகள் தொங்கின. படிக்கட்டுகளில் குரோட்டன்ஸ் வைத்தான்.

தோட்டத்தில் வேப்ப மரங்கள் நிறைய இருந்ததால்... சுத்தமான ஆரோக்கியமான காற்றுக்குப் பஞ்சமில்லை.

பச்சைப் பசேல் என்று அழகான தோட்டத்துக்கு மத்தியில் அமைந்திருந்ததால்...'தோட்டத்து பங்களா' என்றே சுற்று வட்டாரத்தினர் பெயர் சூட்டி விட்டனர்.

சொந்தவீடு, கண் நிறைந்த கணவன், அழகான குழந்தை வசதியான வாழ்க்கை... என்று நிறைவாக வாழத்தான் செய்தாள் பவ்யா.

ஆனால் மனதின் மூலையில் குற்ற உணர்ச்சி அவளை உறுத்திக் கொண்டே இருந்தது.

நிம்மதியான சந்தோஷமான வாழ்க்கையில் அவளை லயிக்க விடாமல் படாதபாடு படுத்தியது... அவளது கடந்த காலம்!

இனம் புரியாத பயம், உறுத்தல்... அழகான வாழ்க்கை கலைந்து அலங்கோலமாகி விடுமோ' என்ற திகில்... கலவரம்...!

தனிமையில் இருக்கும்போது கடந்த காலத்தை நினைத்துக் கொண்டு கண்ணீர் உகுப்பதே வாடிக்கையாக இருந்தது.

சில சமயங்களில் நள்ளிரவில் திடுக்கிட்டு விழித்து எழுந்து அமர்ந்து கொள்வாள்.

சீரான குறட்டையொலி எழுப்பியபடி நடுவில் படுத்திருக்கும் குழந்தை தீபிகாவை அணைத்தபடி தூங்கும் கணவனையே உற்றுப் பார்ப்பாள் பவ்யா.

இரவு விளக்கின் நீல ஒளியில்... கணவனின் கள்ளம் கபடம் அற்ற முகத்தைப் பார்க்கும் போது... வேதனை மனதைப் பிசையும்.

நரேந்திரனைப் பொறுத்தமட்டில் அவன் ஒரு திறந்த புத்தகமாகத்தான்

இருந்தான்.

தினமும் அலுவலகத்தை விட்டு வந்ததும்... அன்றாட நிகழ்வுகளை அவளுடன் பகிர்ந்து கொள்வான்.

இதுவரை அவளிடம் எதையுமே மறைத்ததில்லை. அரசியலிலிருந்து ஆபீஸ் பிரச்சினை வரை... எல்லா விஷயங்களையும் இரவு சாப்பிடும் போது அவளிடம் அலசாவிட்டால் அவனுக்குத் தூக்கமே வராது.

'கணவன் மனைவிக்குள் எந்தவித ஒளிவு மறைவும் இருக்கக் கூடாது' என்பான் நரேந்திரன்.

அவன் சிரித்தபடி மனம் விட்டுப் பேசும் சமயங்களில் எல்லாம்... பவ்யாவுக்கு மனசாட்சி ரம்பமாய் அறுக்கும்.

உதட்டில் செயற்கையாகப் புன்னகையை ஒட்ட வைத்துக் கொண்டு செவி மடுத்துக் கொண்டிருப்பாள்.

'எந்தப் பெண்ணிற்கும் எளிதில் கிடைத்துவிடாத அருமையான வாழ்க்கை அவளுக்குக் கிடைத்திருக்கிறது.

இது அவள் செய்த பூர்வ ஜென்ம புண்ணியத்தின் பலன்தான்!

ஆனால்... தாமரை இலை தண்ணீர் போல... மனம், மகிழ்ச்சியில் ஒட்ட மறுக்கின்றதே?

அவளது வாழ்க்கை அழகான கண்ணாடிக் கோட்டை போன்றது தான்! வெளியிலிருந்து பார்ப்பவர்களை பொறாமைப் பட வைத்து... வெந்து போகச் செய்தது நிஜம்!

அவள் பயந்தது போலவே... விதி, அந்த அழகான கண்ணாடிக் கோட்டைக்கு வேட்டு வைத்து தூள் தூளாக்க... தக்க தருணத்தை எதிர்பார்த்துக் காத்துக் கொண்டிருந்தது.

# 3

முன்னறையிலிருந்த அந்தக் காலத்து கடிகாரம் தன் பெண்டுலத்தை எட்டு முறை அடித்து ஓய்ந்தது தான் தாமதம்... பவ்யாவின் செல்ஃபோன் அவசரமாய் அலறியது.

தினமும் காலை எட்டு மணிக்கு மிகச் சரியாக ஃபோன் செய்துவிடுவான் நரேந்திரன்.

குழந்தை ஏழே முக்காலுக்குத் தான் எழுந்து கொள்வாள் என்று

**யோசனை**

உடல் மெலிந்தவர்கள் தேனில் பேரிச்சம் பழத்தை ஊறவைத்து தினமும் சாப்பிட்டு வந்தால் சதை பிடிக்கும்.

முகத்தில் எண்ணெய் வடியாமல் இருக்க அடிக்கடி குளிர்ந்த நீரில் முகத்தைக் கழுவ வேண்டும்.

- ஹரிஹரன்.

அவனுக்குத் தெரியும்.

ஆவலுடன் ஃபோனை எடுத்து "ஹலோ" என்றாள்.

"ஹலோ... பவ்யா! ஒண்ணும் பிரச்சினை இல்லையே? இங்க பொழுதே நகரமாட்டேங்குது. எப்படா பிராஜெக்ட்டை முடிச்சுட்டு உங்களைப் பார்க்க ஓடி வருவோம்னு... ஏக்கமா இருக்கு.

நான் இல்லாம... தீபுகுட்டி ரொம்ப ஏங்கிப் போயிட்டாளா? அழகான மனைவி,தவமிருந்துபெத்த குழந்தையை தனியா தவிக்கவிட்டுட்டு... இப்படி தூர தேசத்துல பணம் சம்பாதிக்கிறதுக்காக வந்து உட்கார்ந்திருக்கோமேன்னு... ரொம்ப வெறுப்பா வருது பவ்யா.

என்னமோ தெரியலை... மனசே சரியில்லை... நேத்து நைட்டெல்லாம் தூக்கமே வரலை... உனக்கும் குழந்தைக்கும் நான் இல்லாதநேரத்துல... ஏதாவது ஆயிடுமோன்னு இனம் புரியாத பயம் வந்துடுச்சு...

பவ்யா! காலம் ரொம்ப கெட்டுக் கிடக்கே... வேலைக் காரி நாகம்மாவையும் அவ கணவன் முனியனையும்... நம் கராஜுக்கும்ப் பக்கத்துல இருக்கிற ரூம்லே தங்கிக்கச் சொல்றியா?

நேத்து நைட்லே இருந்து மனசு கிடந்து அடிச்சுக்குது. நிம்மதியே இல்லை. அதான்..." மறுமுனையில் குரல் இலேசாகப் பிசிறடிக்க படபடத்தான் நரேந்திரன்.

"எ... என்னங்க இது? நீங்க இப்படி, மனசுடைஞ்சு பேசலாமா? 'உத்தியோகம் புருஷ லட்சணம்னு' சொல்வாங்க...

ஆபீசுலே ரொம்ப சீக்கிரமா உங்களுக்கு பதவி உயர்வு கிடைச்சப்போ... நாம்ப எவ்ளோ சந்தோஷப்பட்டோம்? உங்க திறமைக்கு கிடைச்ச அங்கீகாரம் அது.

மனசுல என்னிக்குமே வெறுப்பு மண்டக் கூடாதுங்க... அது உத்தியோகத்துல உங்க 'கான்சென்ட்ரேஷனை' பாதிக்கும். ஆபீஸ்லே உங்களை நம்பி பெரிய பொறுப்பை ஒப்படைச்சு... வெளிநாடுகளுக்கு அனுப்பி வைக்கிறாங்க...

நீங்க என்னை வருஷக் கணக்குலேயா... அங்கேயே உட்கார்ந்திருக்கப் போறீங்க...

பிராஜெக்ட் முடிஞ்ச கையோட பறந்து வந்துடப் போறீங்க... அவ்வளவு தானே? நம்ம தீபு குட்டியோட எதிர்காலம் நல்லாயிருக்கணும்னுதானே இவ்ளோ பாடுபடறீங்க?

உங்களுக்கு இப்போ என்னங்க பிரச்சினை? 'காலம் கெட்டுப் போயிருக்கே... வீட்டுல மனைவியும் குழந்தையும் தனியா இருக்காங்களே?'ன்னு... ஒரு பயம் வந்திடுச்சு. அவ்வளவுதானே?

ஏங்க... நீங்க பல சமயங்கள்லே இந்த மாதிரி பிராஜெக்ட் விஷயமா கிளம்பிப் போகலையா? இத்தனை காலமா நான் சமாளிக்கலையா? எச்சரிக்கை உணர்வோட ஜாக்கிரதையா தானே இருக்கோம்? அப்புறம் என்ன? சரி... உங்க மனசுல புதுசா ஒரு குழப்பம் வந்திருக்கு... தேவைப்பட்டா நாகம்மாவையும் முனியனையும் வீட்டுலே தங்க வச்சுக்கிறேன்.

நீங்க வீணா எங்களைப் பத்தி பயப்படாதீங்க. பெண்கள் தைரியமா இருக்கணும். எது வந்தாலும் துணிஞ்சு நின்னு சமாளிக்கணும். தன்னம்பிக்கையோட இருக்கணும்'னு நீங்கதானே சொல்வீங்க?

ஆக்ரோஷமா சீறிப் பாய வந்த புலியைக் கூட... முறத்தால அடிச்சு விரட்டின வீர தமிழ்ச்சியைப் பத்தி... தீபு குட்டிக்கு கதை கதையா சொல்வீங்களே? மறந்துட்டீங்களா?

மனசைப் போட்டு அனாவசியமா குழப்பிக்காம... அங்கே உங்க வேலையில் மட்டும் கவனம் செலுத்துங்க... நாங்க இங்க சர்வ ஜாக்கிரதையாகத் தான் இருக்கோம். சரியா?

தீபு உங்ககிட்டே பேசணும்னு துடிச்சுட்டிருக்கா... அவகிட்டே பேசுங்க" சிரித்தபடி அவனுக்கு ஆறுதல் கூறித் தேற்றியவள்... மகளிடம் செல்ஃபோனைக் கொடுத்தாள்.

"அப்பா! குட் மார்னிங்... நீங்க சொல்றபடியே நான் ரொம்ப சமர்த்தா இருக்கேன்பா... அம்மாவைப் படுத்தலை. அடம் பண்ணாம சாப்பிடறேனே?"

அப்பாவிடம் பேசும் போது குழந்தையின் முகம் தாமரைப் பூவாய் மலர்ந்து பொலிவதை ரசித்தாள் பவ்யா.

மறுமுனையில் நரேந்திரன் பேசுவதை செவி மடுத்த தீபிகாவுக்கு மட்டற்ற மகிழ்ச்சி ஏற்பட்டது.

"ஹையா... கீ குடுத்தா யானை பொம்மை தும்பிக்கையைத் தூக்கி சத்தம் போட்டுட்டே ஓடுமா? சரிப்பா... தவளை தாவித் தாவிக்

குதிக்குமா? ஹை ஜாலி தான்... உம்... சரிப்பா" என்ற தீபிகா... திரும்பி தாயை ஏறிட்டாள்.

"அம்மா! உன்கிட்டே அப்பா மறுபடியும் பேசணுமாம்" என்ற படி 'செல்'லை அவளது கையில் திணித்தாள்.

"என்ன பவ்யா! குழந்தைக்கு ஜலதோஷம் பிடிச்சு மூக்கு அடைச்சுட்டிருக்காப்பல தெரியுது. 'கொண கொண'ன்னு பேசறா..." படபடத்தான் நரேந்திரன்.

"ஆமாங்க... நேத்து நைட்டுலே இருந்து மூக்கு அடைச்சுக்கிடுச்சு... 'நேஸல் ட்ராப்ஸ்' மூக்குலே விடலாம்னா... அது தீர்ந்து போயிருந்தது.. நான் அவளைப் பார்த்துக்கிறேன். நீங்க கவலைப்படாதீங்க."

"எப்பவும் மாத்திரை, டானிக், ட்ராப்ஸ், ஆயின்மெண்ட்... இதெல்லாம் ஸ்டாக் வச்சிருப்பியே? மெடிக்கல் ஷாப்புக்குப் போயி உடனடியா தேவைப்பட்டதை வாங்கி வச்சுக்கோ... கவனமா, பத்திரமா இருங்க. நா வச்சுடட்டுமா பவ்யா?"

"சரி! நீங்க விசனப்படாம இருங்க. பை!"

அவனுடன் பேசி முடித்ததும்... பெரிய பாறாங்கல்லை ஏற்றி வைத்தாற் போன்று மனம் கனத்துப் போனது.

திடீரென்று ஏன் இப்படி கவலைப்படுகிறார்? திடுதிப்பென்று அவர் மனது ஏன் குழம்பித் தவிக்க வேண்டும்.

அவரது யூகம் என்றுமே மிகச் சரியாக இருக்குமே! 'இது இப்படித்தான் நடக்கும். என் மனசு சொல்லுது. நடக்குதா இல்லையான்னு பாரேன்' என்பார்.

அது போலவே நூல் பிசிறாமல் நடந்து விடுமே?

அவர் பயப்படுவது போலவே... ஏதாவது பிரச்சினை வந்துவிடுமோ? ஆபத்து வந்துவிட்டால்...?

ஏற்கனவே நான் உள்ளுக்குள் பழைய விஷயத்தை நினைத்து பயந்து செத்துக் கொண்டிருப்பது போதாதா?

அவர் கூறியது போல்... நாகம்மாவையும் முனியனையும் துணைக்கு வந்து தங்கச் சொல்லலாமா?

இவர் அடிக்கடி வெளி நாடுகளுக்குப் பறந்து கொண்டிருக்கிறார். ஒவ்வொரு முறையும் துணைக்கு வந்து தங்கச் சொல்லி... அவர்களிடம் கேட்பது நன்றாக இருக்குமா?


தங்கச் சொல்லலாம் தான்! அதில் ஒன்றும் பிரச்சினை இல்லை என்றாலும்... இன்னொரு விஷயம் இடிக்கிறதே?

நாகம்மாவின் கணவன் முனியன் சரியான குடிகாரன் ஆயிற்றே? இருட்டி விட்டால் போதும்... கண்மண் தெரியாமல் குடித்துவிட்டு வந்து... மனைவியை வாய்க்கு வந்தபடி திட்டி ரகளை செய்வதாகக் கேள்விப் பட்டோமே?

இது தேவையா? இரவு நேரத்தில் மூக்கு முட்டக் குடித்துவிட்டு இங்குவந்தும் கலாட்டா செய்வானே? வேண்டவே வேண்டாம்...

வேலியில் திரியும் ஓணானை எடுத்துக் காதுக்குள் விட்ட கதையாகி விடுமே? நிம்மதி வீணாகப் பறிபோய் விடுமே! வேண்டாம்!' யோசனையுடன் சமைத்து முடித்து பாத்திரங்களை தேய்ப்பதற்காக ஸிங்கில் போட்டு நிமிர்ந்த வேளையில்... வேலைக்காரி நாகம்மா அவிழ்ந்த கூந்தலை கோடாலி முடிச்சிட்டுக் கொண்டே உள்ளே நுழைந்தாள்.

"இந்த பாழாய் போன மனுஷன் நேத்து குடிச்சுட்டு வந்து... என்னை இழுத்துப் போட்டு அடிச்சு



**'டைட்டானிக்'** படத்திற்காக ஆஸ்கர் விருது பெற்றவர் கேத்தி வின்செலட். 3000 அமெரிக்கர்கள் பங்குபெற்ற இணையதள வாக்கெடுப்பு ஒன்றில், இவர் சிறந்த இயற்கை அழகியாகத் தேர்ந்தெடுக்க ப்பட்டுள்ளாராம்.

- க.ரவீந்திரன்

கண்டமேனிக்கு திட்டிட்டான் தாயீ...” வழக்கம் போல் புலம்ப ஆரம்பித்தாள் நாகம்மா.

தட்டில் இட்லிகளை வைத்து சூடான சாம்பாரால் இட்லிகளைக் குளிப்பாட்டி... ஒரு டம்ளர் காபியையும் வைத்து நீட்டினாள் பவ்யா.

“இந்தாங்க நாகம்மா! உட்கார்ந்து முதல்லே சாப்பிடுங்க... சாப்பிட்டுவிட்டு தெம்பா பாத்திரம் தேய்க்கலாம். ஒண்ணும் அவசரம் இல்லை. கவலை ஒரு பக்கம் இருக்கட்டும். வயித்தைக் காயப் போடாதீங்க... உங்களை நம்பி ரெண்டு வயசுப் பொண்ணுங்க இருக்காங்களே? கொஞ்சம் சகிச்சுக்கோங்க... காலப்போக்குல எல்லாம் சரியாயிடும். கடவுள் மேல பாரத்தைப் போடுங்க” இதமாகப் புன்னகைத்தாள் பவ்யா.

“பெத்த தாயைப் போல் என் மேல அக்கறை காட்டுறே தாயீ! உன்னோட நல்ல மனசுக்கு எந்தக் குறையும் வராது ராசாத்தி” மனதார வாழ்த்திய நாகம்மாவுக்கு அதீத பசி போலும்!

அவசர கதியில் சாப்பிடலானாள்.

நரேந்திரன் யூகித்தது போலவே... மிகப்பெரிய ஆபத்து அவளுக்காக வழி மேல் விழி வைத்து காத்துக் கொண்டிருந்தது.

# 4

கருமேகங்களைக் கலைத்துவிட்டு... வானம் தெளிவாய் தன் முகம் காட்டிக் கொண்டிருந்தது.

நேற்று பலத்த காற்றுடன் பெய்த மழையில்... தோட்டத்து நெல்லி மரத்தின் கிளைகள் முறிந்து... நெல்லிக்காய்களுடன் பாரமாய் கீழே சரிந்திருந்தன.

நாகம்மா பாத்திரங்களைத் தேய்த்துக் கழுவி வீட்டைத் துடைத்து முடித்ததும்... அவளை அழைத்துக் கொண்டு தோட்டத்திற்குள் இறங்கி விட்டிருந்தாள் பவ்யா.

தென்னை மட்டைகளும் ஓலைகளும் ஆங்காங்கே விழுந்து இறைந்து கிடந்ததை... நாகம்மாவை விட்டு அப்புறப்படுத்த வைத்தாள் பவ்யா.

நெல்லி மரக் கிளைகளை அகற்றி விட்டு உருண்டு உதிர்ந்து கிடந்த நெல்லிக்காய்களை அள்ளி பிளாஸ்டிக் கூடைக்குள் போட்டுக் கொண்டாள்.

குழந்தை தீபிகாவுக்கு நெஞ்சில் சளி அடைத்திருந்ததாலோ

என்னவோ... சரியாகவே சாப்பிடவில்லை

அதனாலோ... அல்லது மனதில் நிலவிய குழப்பத்தாலோ... பவ்யா காபி பருகியதோடு சரி! டிபனை தொட்டுக்கூடப் பார்க்கவில்லை.

மீதமிருந்த இட்லிகளை டிபன் பாக்ஸில் திணித்து நாகம்மாவிடம் கொடுத்தாள்.

"சாயந்தரம் பாத்திரம் தேய்க்க வர வேணாம் நாகம்மா. நானே தேய்ச்சுக்கிறேன். பாப்பாவுக்கு சளி பிடிச்சிருக்கு. சரியா சாப்பிட மாட்டேங்கிறா... பிரெட் டோஸ்ட் ஏதாச்சும் சிம்ப்பிளா செய்துக்க வேண்டியதுதான்.

பாப்பா வீட்டிலேயே அடைஞ்சு கிடக்கிறோம்னு ரொம்ப ஃபீல் பண்றா... அவளை அழைச்சுக்கிட்டு மெடிக்கல் ஷாப்புல மருந்து வாங்கிட்டு... அப்டியே குன்றத்தூர் முருகன் கோவிலுக்குப் போய்... அவ பேர்ல அர்ச்சனை பண்ணிட்டு வரலாம்னு இருக்கேன்.

"சரி தாயீ! நாளைக்குக் காலையில நான் வந்து சுக்கு, மிளகு, துளசி இலையைத் தட்டிப்போட்டு கசாயம் வச்சுத் தரேன். குழந்தைக்கு ஒரு வாட்டி குடுத்தாப் போதும்... மார்ச்சளி கப்புன்னு இறங்கிடும் தாயீ– நான் வரட்டுமா?" டிபன் பாக்ஸை வாங்கிக் கொண்டு நடையைக் கட்டினாள் நாகம்மா.

குழந்தை தீபிகா 'சுட்டி டி.வி'யில் லயித்துப் போய் இருந்தாள்.

அடுக்களைக்குள் புகுந்த பவ்யா நெல்லிக்காய்களை பெரிய பாத்திரத்தில் போட்டு நன்கு அலசினாள்.

நரேந்திரனுக்கு நெல்லிக்காய் ஊறுகாய் என்றால் மிகவும் உயிர்.

டி.வி.யில் செய்தி பார்க்கும் கூட... இடையில் எழுந்து கிச்சனுக்குள் இருக்கும் ஊறுகாய் ஜாடியைக் கிளறி எடுத்து வாயில் போட்டுக் கொள்வான்.

"என்னங்க இது உங்களுக்கு என்ன மசக்கையா?

நெல்லிக்காய் ஊறுகாய்லே அப்படி என்ன தான் இருக்கோ?" பவ்யா கிண்டலடிப்பாள்.

"காரசாரமா டேஸ்டா ஊறுகாய் போட்டிருக்கியே? அதான்... நெல்லிக்காய்லே நிறைய சத்து இருக்கு. தெரியுமா? வாந்தி, பித்தம், தலைசுத்தல், சுகர் இவைகளுக்கு எல்லாம் நல்ல அருமருந்து... அதுவும் தவிர..."

சட்டென்று இடை மறித்து கைகளைக் குவிப்பாள் பவ்யா.

"ஐயாவை நான் தெரியாம கேள்வி கேட்டுட்டேன். லெக்சர் அடிச்சது போதும்! போய் டி.வி. பாருங்க. நான் டிபன் பண்ணுற வேலையை கவனிக்கணும்"

"சமையல்லே உனக்கு கை கொடுத்து உதவி உன்னோட பாரத்தைக் கொஞ்சம் இறக்கி வைக்கணும்னு பிரியப்படறேன். எனக்கு 'நளபாகத்தை' கொஞ்சம் கத்துத் தாயேன். பவ்யா!"

"நீங்க ஒரு உதவியும் பண்ண வேண்டாம். உபத்திரவம் பண்ணாம பாப்பா கூட உட்கார்ந்து டி.வி. பாருங்க. அது போறும்"

அரை மனதுடன் நெல்லிக்காய் ஊறுகாயை வாயில்போட்டு குதப்பியபடி, அவன் அன்று அடுக்களையை விட்டு வெளியேறியது... இன்று ஞாபகத்திற்கு வந்து இவளது தொண்டையை அடைத்தது.

கழுவிய காய்களை ஈரம் போக துடைத்துவிட்டு... கடாயில் எண்ணெய் விட்டு உப்பு, காரமிட்டு நன்கு வதக்கி கடுகு, கறிவேப்பிலை பெருங்காயமிட்டு தாளித்துக் கொட்டி இறக்கினாள்.

அன்று மாலையில்... ஆகாய நீல வண்ண ஆர்கண்டி காட்டன் புடவையை அணிந்துகொண்டு, குழந்தைக்கும் நீல வண்ண கவுனை அணிவித்தாள்.

மழை திடீரென்று வந்து விடுமோ என்ற பயத்தில்... ரெயின் கோட்டையும் எடுத்துக் கொண்டாள். வீட்டைப் பூட்டிக் கொண்டு கராஜில் இருந்த ஸ்கூட்டியைத் தள்ளி குழந்தையை அமர வைத்துக் கொண்டு... நிதானமாக கேட்டைத் தாண்டி சாலையில் இறங்கி கவனமாக ஓட்டத் தொடங்கினாள்.

இருட்டும் முன்... மலையில் உள்ள முருகன் கோவிலுக்குச் சென்று தரிசனத்தை முடித்து இறங்கி விடுவது உசிதம் என்று தோன்ற... ஸ்கூட்டியை கோவிலை நோக்கிச் செலுத்தினாள்.

முன் மண்டபத்தைத் தாண்டி மேலே சென்ற படிக்கட்டுகளில்... குழந்தையைத் தூக்கிக் கொண்டு மூச்சிரைக்க ஏறினாள்.

கோபுர வாசலைத் தாண்டி கோவிலுக்குள் நுழையும் முன்பு திரும்பிக் கீழே பார்த்தாள்.

பச்சைப் பசேலென்று வயல் வெளிகள்...! கோவிலைச் சுற்றிலும் செடி கொடிகளுமாய் அந்த சிறு குன்றுகூட... மாலை நேரத்து வெயிலில் ரம்யமாய் கண்களைக் கட்டிப் போட்டது.

பிரகாரத்தைச் சடுதியில் வலம் வந்தவள்... முருகன் சன்னதிக்குச் சென்று கண்ணீர் மல்க மனமுருகப் பிராத்தனை செய்தாள்.

தரிசனம் முடித்து வெளியில் வந்ததும் குழந்தை தீபிகா... பிரசாதம் விற்கும் ஸ்டாலை ஆவலுடன் நோட்டமிட்டாள்.

“தீபு குட்டி! உனக்கு பொங்கலும் புளியோதரையும் வாங்கித் தரேன். ஆனா வீட்டுக்கு எடுத்துட்டுப் போய்தான் சாப்பிடணும்.

இங்கே உட்கார்ந்து வேடிக்கை பார்த்துட்டே சாப்பிடணும்னு அடம் பண்ணக்கூடாது. அப்பா இருந்தாப் பரவாயில்லை. இருட்டும் முன் நாம்ப ‘ட்ராப்ஸ்’ வாங்கிட்டு வீடு போய்ச் சேரணும். இல்லையா?”

குழந்தை நிலைமையைப் புரிந்து கொண்டு பலமாய் தலையை ஆட்டியது. பிரசாதப் பொட்டலங்களை வாங்கி கைப்பைக்குள் போட்டுக் கொண்டு... மளமள வென்று குழந்தையுடன் கீழே இறங்கி... ஸ்கூட்டியை சற்று விரைவாகச் செலுத்தினாள்.

மருந்துக் கடையில் நேஸல் ட்ராப்ஸையும், காய்ச்சல் தலைவலி மாத்திரைகளையும் வாங்கிக் கொணடு வெளிப்பட்டவள்... தற்செயலாய் சாலையின் எதிர்ப்புறத்திலிருந்த கடை வாசலில் நின்றவனை ஏறிட்டாள்.

அவளுக்கு அப்படியே தூக்கி வாரிப் போட்டது. இவளைப் பரிச்சயமாய் புன்னகைத்தபடி கையை வேறு அவன் ஆட்டியதும் பவ்யாவுக்கு இதயம் தந்தியடித்தது.

சாலையில் வேறு ‘கர் புர்’ என்று வாகனங்கள் அசுர வேகத்தில் விரைந்து கொண்டிருந்ததால்... அவனால் சாலையைக் கடந்து பவ்யாவை நெருங்க முடியவில்லை. தீபிகாவைத் தூக்கினாள்.

உள்ளுக்குள் பலமாய் எச்சரிக்கை மணி அடித்தது தான் தாமதம்... மருந்துக் கடை வாசலிருந்து ஸ்கூட்டியை ஸ்டார்ட் செய்து மின்னல் வேகத்தில் கிளப்பினாள்.

பயத்திலும் திகிலிலும் அவளது

**யோசனை**

**கை**யைத் துடைப்பதற்காக உபயோகிக்கும் நாப்கின்னால் (டிஷ்யூ பேப்பர்) மூக்குக் கண்ணாடியைத் துடைத்தால் மூக்குக் கண்ணாடி பளபளப்பாக இருக்கும்.


**கு**ழந்தைகள் பள்ளி சென்று வந்ததுமே வாட்டர் பேக் மூடியைத் திறந்து வைத்து விட வேண்டும். அப்போதுதான் வாடை இல்லாமல் இருக்கும். இல்லை என்றால் புழுங்கல் வாடை அடிக்கும்.

**- ஹரிஹரன்.**

கை விரல்கள் சில்லிட்டன.

## 5

பவ்யாவுக்கு குப்பென்று வியர்த்து வழிந்தது. குளத்தில் முங்கி எழுந்தவளைப் போன்று வியர்வையில் தொப்பலாய் நனைந்து கொண்டிருந்தாள்.



சத்ருக்கன் சின்ஹாவின் மகள் சோனாலட்சுமி சின்ஹா. ஆடை வடிவமைப்பாளராகவும் மாடலாகவும் திகழ்கிற இவர், தனது முதல் படத்திலேயே சல்மான்கானோடு ஜோடியாக நடிக்கிறார்.
- க.ரவீந்திரன்

இருட்டத் தொடங்கி விட்டதால் சாலையில் பளிச்சென்று விளக்குகள் பளீரென்று ஒளிரத் தொடங்கின.

சிக்னலுக்காக காத்திருந்த தருணத்தில் திகிலுடன் பின்னால் திரும்பி... 'அவன்' தென்படுகின்றானா என்று பார்வையால் துழாவினாள்.

சாலையில் பெரும்பாலானோர் ஹெல்மெட் அணிந்திருப்பதால் யாரையும் சட்டென்று அடையாளம் கண்டுபிடிப்பது சிரமம் தான்!

'அவன் வெளிர் நீல நிறச் சட்டை அணிந் திருந் தானே? நீலக் கலர் சட்டை கண்ணில் படுகின்றதா?' என்று மீண்டும் கலவரத்துடன் ஆராய்ந்தாள்.

'என்னைத் தேடி வீட்டிற்கு வந்து விட்டால்...?

அடக் கடவுளே! யார் முகத்தில் இனி மேல் விழிக் கவே

கூடாது என்று தினமும் மன்றாடிப் பிராத்தனை செய் தாளோ... அந்தக் கயவனின் கண்களில் பட்டுவிட்டேனே?

அவனுக்கு என்னை அடையாளம் தெரிந்து தான் பரிச்சயமாய் புன்னகைத்து கையை அசைத்திருக்கிறான் பாவி!...

அடையாளம் எப்படி தெரியாமல் போகும்?

“பவ்யா, கல்யாணத்துக்கு முன்னாடி எப்படி இருந்தியோ, இன்னமும் அப்படியே இருக்கியே? உன்னைப் பார்த்தா ஒரு குழந்தைக்கு தாயானவள் மாதிரியே தெரியலை. உன் இளமையின் ரகசியம் என்ன?

உன்னை முதல் முறையா பார்த்தப்போ... நான் என்ன நினைச்சேன் தெரியுமா?

புதுசா பறிச்செடுத்த மஞ்சள் கிழங்கு மாதிரி அப்படியொரு பொலிவோட... தங்கச்சிலை மாதிரி மெல்ல அசைஞ்சு நடந்து வந்தே பாரு!

அந்தப் பெரிய கண்ணும் கூர் மூக்கும் அசரடிக்கிற அழகும்... என்னை காந்தமா ஈர்த்திடுச்சு. தெரியுமா? ‘இந்த அழகு தேவதையை பொக்கிஷம் மாதிரி பத்திரமா நான் பாத்துக்கணும்னு முடிவெடுத்தேன்.

அந்த அழகுல இம்மியளவு கூடக் குறையலையே? என்ன ரகசியம் சொல்லேன்” என்று நரேந்திரன் இவளது அழகை ஆசையாய் வர்ணித்து செல்லமாய் காதைத் திருகியது... இப்போது ஞாபகத்திற்கு வந்தது.

‘அவன்... அவன்... அந்த அரவிந்த் ஒரு கருநாகம் ஆயிற்றே? என்னைக் கொத்தாமல் விடுவானா?

இத்தனை காலமாய் வலை வீசி என்னைத் தேடிக் கொண்டு தான் இருந்திருப்பான். இன்று அவன் கண்ணில் பட்டுத் தொலைத்துவிட்டேனே?

அவன் சும்மா விட்டு வைப்பானா? பின் தொடர்ந்து அவன் வீட்டிற்கு வந்து தொலைந்துவிட்டால்...? ஊகூம்! அதற்கு இடம் கொடுக்கவே கூடாது.

நேர் வழியில் போகாமல் சந்து பொந்துகளில் சுற்றி போக்குக் காட்டிவிட்டு... அவன் கண்களில் மண்ணைத் தூவி விட்டு... ஜாக்கிரதையா வீடு போய் சேர வேண்டியது தான்!’

அதை செயல்படுத்த முனைந்தபோதுதான் படு சிரமத்திற்கு ஆளாக நேர்ந்தது.

சில மாதங்களுக்கு முன்பு பெய்த அடைமழையில்... சாலைகள் பழுதடைந்து குண்டும் குழியுமாய் பள்ளமும் மேடுமாய்... ஸ்கூட்டியை ஓட்டுவதே பிரம்ம பிரயத்தனமாக இருந்தது.

பவ்யாவின் மனதில் புதிதாய் இன்னொரு பயம் முளை விட்டது. 'கும்மிருட்டில் ஏதாவது ஒரு சந்தில் ஸ்கூட்டி ரிப்பேராகி, நின்று தொலைத்தால்... ஏடாகூடமாக மாட்டிக்கொள்வோமே?'

பின்னால் திரும்பிப் பார்த்தாள்.

யாரும் பின் தொடர்ந்து வருவதாகத் தெரியவில்லை. இருந்தாலும் மனதில் படபடப்பு இன்னமும் அடங்கவில்லை. சர்வ ஜாக்கிரதையாக ஸ்கூட்டியை ஓட்டிக் கொண்டு... தோட்டத்து பங்களாவை நோக்கி விரைந்தாள்.

கேட்டைத் திறந்து கராஜில் ஸ்கூட்டியை நிறுத்திவிட்டு வீட்டைத் திறந்து குழந்தையுடன் நுழைந்தவள்... மின்னல் வேகத்தில் கதவைச் சாத்தினாள்.

தீபிகா சுட்டி டி.வி.யைப் பார்ப்பதற்காக ஆவலுடன் உள்ளே ஓடி சோபாவில் அமர்ந்து ரிமோட்டை ஆன் செய்தாள்.

பவ்யாவுக்கு இதயத் துடிப்பு எகிறிய வண்ணம் இருந்தது.

நெஞ்சில் கையை வைத்தபடி விழிகளை மூடி... சாத்திய கதவின் மேல் சாய்ந்து கொண்டாள்.

இன்று காலையில் நரேந்திரன் கவலை தொனிக்கப் பேசிய வார்த்தைகள்... அவளது செவிகளில் ரீங்காரம் இட்டன.

'என்னமோ தெரியலை பவ்யா! மனசே சரியில்லை. உங்களுக்கு ஏதாச்சும் ஆபத்து வந்துடுமோன்னு... உள்ளூர பயமா இருக்கு' என்றாரே?

அவரது கணிப்பு என்றுமே பொய்த்தில்லையே?

அந்த ஆபத்து... ஒருவேளை அரவிந்த் ரூபத்தில் வந்து தொலைக்கப் போகின்றதா?

ஐயோ! அந்த நாசகாரப் பாவி என் இனிய இல்லறத்திற்கே வேட்டு வைத்துவிடுவானே?

தெளிந்த நீரோடை போல் செல்லும் அமைதியான வாழ்க்கை அந்த அரவிந்தால் பாழாகி விடுமோ?'

துக்கம் பந்தாய் எழும்பி அவளது தொண்டையை அடைத்தது.

கண்ணீர் உடைப்பெடுத்துக் கொண்டு வழிந்தது. தேற்றுவார் யாருமின்றி தேம்பித் தேம்பி அழுதாள்.

பெண்கள் தங்கள் மனதிற்கு கடிவாளம் இட்டு இழுத்துக் கட்டி கட்டுக்குள் வைத்துக் கொள்ள வேண்டும்.

மனம் தறி கெட்டுப் போய் தாவி ஓடி அலை பாய்வதை அனுமதித்து விட்டால்... அவமானப்பட்டு காலத்திற்கும் அல்லல் பட்டு கண்ணீர் உகுக்க வேண்டியதுதான்.

படிக்கும் வயதில் கவனத்தை சிதறவிட்டு 'காதல்' என்னும் புதை மண்ணில் பவ்யா விழுந்து விட்டிருந்தாள்.

புதை மண்ணில் புதைந்து முழுவதுமாக மடிந்து போகும் அபாய தருணத்தில்... அதிர்ஷ்ட வசமாக அதிலிருந்து அவள் மீண்டு விட்டாள் தான்.

இருந்தாலும் இளவயதில்... அறியாமல் செய்துவிட்ட சிறு பிசகு... அவளது வாழ்க்கைக்கே உலை வைக்கப் போகின்றதே?

கதவில் சாய்ந்திருந்தவள் அப்படியே சரிந்து அமர்ந்து முழங்காலில் முகம் புதைத்தபடி விசும்பினாள்.

"அம்மா... பசிக்குதும்மா" என்றபடி குழந்தை அவளது தோளைத் தொட்டது.

"இ... இதோ அஞ்சு நிமிஷத்துல ரெடி பண்ணிடறேன் கண்ணா"

"அம்மா! எதுக்கு அழறேம்மா?" அவளது கண்ணீரைப் பிஞ்சுக் கரத்தால் துடைத்தாள் தீபிகா.

"ஓ... ஒண்ணுமில்லேம்மா. கண்ணுல தூசி பட்ருச்சுடா. அது ரொம்ப என்னை உறுத்துது. அதான்"

"உறுத்துச்சுன்னா... அழுகை வருமாம்மா?"

"உறுத்தல் இருந்தா அழுகை வரத்தானே செய்யும். நான் கொஞ்சம் கவனக் குறைவா இருந்துட்டேன்.

நீ என்னத்துக்கு பயந்து போய்... அப்படி பார்க்கிறே? அம்மாவுக்கு சரியாயிடும். வா!" தழுதழுத்தபடி பேசிவிட்டு எழுந்து அடுக்களைக்குள் சென்றாள்.

நினைவலைகள் பின்னோக்கிச் சுழன்று... அவளை வலுக்கட்டாயமாய்

கடந்த காலத்திற்குள் அமிழ்த்தியது.

# 6

**ப**வ்யா அப்போது கல்லூரியில் மூன்றாமாண்டு படித்துக் கொண்டிருந்தாள்.

அவளுக்கு இனியா என்று ஒரு தங்கையும் ரகு என்று ஒரு தம்பியும் உண்டு.

வீட்டிற்கு இவள் மூத்தப்பெண் என்பதால்... குடும்பப் பொறுப்புடன் அடக்க ஒடுக்கமாய் பதவிசாய் தான் நடந்து கொண்டாள் பவ்யா.

கல்லூரி விட்டு வந்ததும்... மாலையில், கூடுதல் தகுதிக்காகத் தினமும் கம்ப்யூட்டர் சென்டருக்குச் சென்று... கம்ப்யூட்டர் கோர்ஸையும் கற்று வந்தாள்.

அப்பா வைத்தீஸ்வரன் நடுத்தர வர்க்கத்தைச் சேர்ந்தவர் தான். பல சரக்கு மற்றும் காய்கறி கடை நடத்தி வந்தவர்.

அவருக்கு பவ்யாவின் மீது அதீத பாசம்! கண்களைக் கட்டிப் போடும் அழகுடன் மகாலட்சுமி போல் வளைய வரும் பவ்யாவை... அவருக்கு நிரம்பவே பிடிக்கும்.

பெயருக்கு ஏற்றாற்போல் பவ்யமாய் பணிவுடன் நடந்து கொள்ளும் மூத்த மகளை நன்கு படிக்க வைத்து.. நல்ல இடத்தில் சீரும் சிறப்புமாகக் கட்டிக் கொடுக்க வேண்டு என்று அவர் எண்ணியிருந்தார்.

அவள் ஆசையாய் 'கம்ப்யூட்டர் கோர்ஸ் கற்றுக் கொள்ள வேண்டும்' என்று கூறியபோது... அவர் தடையேதும் சொல்லவில்லை.

அம்மா சொர்ணத்திற்கும் பவ்யாவின் மேல் அலாதிப் பிரியம் தான்! இந்தக் காலத்து இளம் பெண்களைப் போல் இல்லாமல்... வீட்டு வேலைகளை இழுத்துப் போட்டு கொண்டு செய்வாள் பவ்யா.

அம்மாவுக்கு சகல காரியங்களிலும் கை கொடுத்து அவளது வேலைப் பளுவை பாதியாக் குறைத்து விடுவாள்.

"பார்த்தியா எம் பொண்ணை! அழகு, அறிவு, திறமை, குணம், சுறுசுறுப்பு... இந்த விழுப்புரத்திலே... எவனுக்காவது இப்பேர்ப்பட்ட மகள் கிடைச்சிருப்பாளா?

இவளைப் பார்த்துட்டு.. 'நாமளும் அக்கா மாதிரியே பொறுப்பா பதவிசா நடந்துகிட்டு பெரியவங்க கிட்ட நல்ல பேரெடுக்கணும்னு...

இனியா குட்டிக்கும் பொறுப்பு வந்துடுச்சு.

பவ்யா அப்படியே எங்கம்மாவை உரிச்சுட்டு வந்திருக்கா... அவளை எம் பொண்ணா அடைய நான் கொடுத்து வச்சிருக்கணும்" பெருமையாய் மார்தட்டிக் கொள்வார் வைத்தீஸ்வரன்.

பவ்யாவுக்கு பெருமை பொங்கி வழியும். குதூகலம் மட்டும் தாண்டவமாடிய குடும்பத்தின் மீது ஊரார் கண் பட்டதோ... அல்லது ஏதோ போறாத காலமோ... பவ்யா காதல் வலையில் விழுந்து விட்டாள்.

கம்ப்யூட்டர் சென்டரின் மாஸ்டரைப் பார்க்க அடிக்கடி அங்கு வருவான் அரவிந்த்.

ஆரம்பத்தில் அவனை ஏறெடுத்துக் கூடப் பார்க்காமல் தான் இருந்தாள். அவன் அருகில் வந்து பேச்சுக் கொடுத்துப் பார்த்தான். கடிதம் கொடுத்துப் பார்த்தான்.

அவளை நினைத்து உருகிக் கொண்டிருப்பதாக அளந்து விட்டான்.

மூன்று மாதங்களாக அரவிந்த் முயற்சித்தும் அவள் அசைந்து கொடுக்காமல் தான் இருந்தாள்.

ஒருநாள் கம்ப்யூட்டர் சென்டருக்கு இவள் சென்றபோது... கம்ப்யூட்டர் மாஸ்டர் வாசலில் தயாராய் நின்றிருந்தார்.

"இன்னிக்கு சென்டர் லீவும்மா! வாசல்லே அறிவிப்பு எழுதி மாட்டிட்டு நான் கிளம்பப் போறேன். என் தம்பியோட ஃபிரண்ட் அரவிந்த சீரியஸா இருக்கானாம். அவனைப் பார்க்கததான் ஹாஸ்பிடலுக்கு கிளம்பிட்டு இருக்கேன்" என்றதும் இவளுக்கு தூக்கிவாரிப் போட்டது.

நமக்கென்ன வந்ததும் என்று அவள் மௌனமாக அன்று திரும்பியிருந்தால்... அவளுக்கு எந்தப் பிரச்சனையும் வந்திருக்காது. ஆனால், விதி யாரைவிட்டு வைத்திருக்கிறது.

'எறும்பு ஊற ஊறக் கல்லும் தேயும்' என்பார்கள். கடந்த மூன்னு மாத காலமாக... அரவிந்த் அவளை வர்ணித்து காதல் வார்த்தைகள் பேசி மெல்ல மெல்ல அவளது மனதை தன் பால் ஈர்த்துவிட்டிருந்தான் போலும்!

"சார்!... அ... அரவிந்த் இங்க தினமும் வருவாரே? அவர் தானா? அவருக்கு என்னாச்சு?" பதறியபடியே கேட்டாள்.

"அவனே தான் பவ்யா! பார்க்க வாட்டசாட்டமா இருக்கான்.


நல்ல பையன். நல்ல குடும்பத்தைச் சேர்ந்தவன். நல்ல நிறுவனத்தில நல்ல பதவியில இருக்கான்... கை நிறைய சம்பாதிக் கிறான்... ஒரு குறைச் சலும் இல்லை.

ப்ச்! ஏதோ காதல் தோல்வியா இருக்கணும்னு பேசிக் கிறாங்க... தூக்க மாத்திரி சாப்பிட்டுட்டு தற்கொலைக்கு முயற்சி பண்ணினானாம். சரியான முட்டாள் பயல்!

**தே**னீக்கள் சமூக உணர்வுள்ள பூச்சிகளாகையால் தேன் கூடுகளில் பெரிய குடும்பங்களாகவும், காலனிகளாகவும் வாழ்கின்றன. ஒவ்வொரு கூட்டிலும் ஒரு குடும்பம் தங்கி வாழ்கிறது. இந்தக் குடும்பங்கள் பலவகை குணாம்சம் கொண்டிருக்கின்றன. அதனால் மூவகை வடிவம் அல்லது இனப்பாகுபாடு இவற்றில் உள்ளது. (கருத்தரிக்கும் பெண் ஈக்கள்), சோம்பல் ஈக்கள் (ஆண்கள்) பணித் தேனீக்கள் (கருத்தரிக்காத பெண் ஈக்கள்) இவ்வாறு ஒரு தேனீக்காலனியில் ஒரு ராணி ஈயும், ஒரு நூறு ஆண் ஈக்களும், பல்லாயிரக்கணக்கான பணி தேனீக்களும் இருக்கும். லியோ டால்ஸ்டாய் தேனீக்களின் வாழ்க்கையை, வளர்ப்பின் கவிதையாகத் தமது நாவல்களில் திறம்படச் சித்திரித்துள்ளார்.

- க.ரவீந்திரன்

கடைசி நிமிஷத்துல படாதபாடுபட்டு காப்பாத்திட்டாங்க. அவனைப் பார்க்கத்தான் கிளம்பிட்டிருக்கேன்... பெத்தவங்கமனசுஎன்ன பாடுபடும்னு நினைச்சுப் பார்த் தானா... ச்சே!"



அவ்வளவுதான்! ஆடிப் போய்விட்டாள் பவ்யா.

இரு நாட்களுக்கு முன் அரவிந்த் அவளருகே வந்தமர்ந்தான். திரும்பிக் கூடப் பார்க்காமல் கணிணி திரையில் பார்வையைப் பதித்திருந்தாள்.

"பவ்யா! இன்னிக்கோட நூறு நாளாச்சு! நான் கேட்ட துக்கு பதிலே சொல்ல மாட்டியா, உன்னை நினைச்சு உருகி உருகியே நான் செத்துடுவேன் போலிருக்கு.

## யோசனை

**எ**ல்லாக் காய்களிலும் சிறிது சிறிது போட்டு குக்கரில் வேக வைத்து அந்த தண்ணீரை எடுத்துரசம் செய்து அதில் சாதம் பிசைந்து சிறு குழந்தைகளுக்கு கொடுக்கலாம். மலச்சிக்கல் வராது.

**கா**ய்ந்த எலுமிச்சையைத் துண்டாக்கி தோல்களை மிக்சியில் போட்டுத் தூளாக்கிக் கொள்ளவும். முகம் கழுவுவதற்கு பத்து நிமிடம் முன் இப்பொடியை சிறிதளவு எடுத்து பாலுடன் குழப்பி ஊறியபின் முகம் கழுவினால் பளிச்சென இருக்கும்.

**- ஹரிஹரன்.**

இந்த அழகு தேவதை எனக்கு கிடைக்கலேன்னா... நான் இந்த உலகத்தையே வெறுத்துடுவேன். பவ்யா! இது சத்தியம்...

கடைசியா கேட்கிறேன். இதோ இந்த மஞ்சள் ரோஜாவை கிளாஸ் முடிஞ்சு நீ வெளியில வர்றப்போ... உன்னோட கூந்தல்லே நீ சூடிக்கிட்டு வந்தா.. நீ என் காதலை ஏத்துக்கிட்டதா அர்த்தம்! இன்னிக்கு முடிவா எனக்கு ரெண்டுல ஒண்ணு தெரியணும்.

பிடிக்கலேன்னா நீ போயிட்டே இரு! அதுக்கு அப்புறம் நான் உன்னைத் தொந்தரவு செய்ய மாட்டேன். ப்ளீஸ்..." என்றபடி மஞ்சள் ரோஜாவைக் கம்ப்யூட்டருக்குப் பக்கத்தில் வைத்துவிட்டு அகன்றான்.

நடுங்கிய விரல்களால் அந்தப் பூவின் இதழ்களை மிருதுவாகத் தொட்டாள் பவ்யா.

அவளுக்கும் அவன் மேல் பிடித்தம் ஏற்பட்டு விட்ட போதிலும் குடும்பச் சூழ்நிலை, அப்பா அவள் மீது வைத்துள்ள நம்பிக்கை... ஜாதி, இனபேதம் ஆகியவற்றை மனதில் நினைத்து... உள்ளுக்குள் துளிர்த்த காதலுக்கு முற்றுப்புள்ளி வைத்துவிட்டிருந்தாள்.

மனதை இரும்பாக்கிக் கொண்டு மஞ்சள் ரோஜாவை அப்பால் தள்ளி வைத்துவிட்டு... கிளாஸ் முடிந்ததும் ஹேண்ட் பேக்கை மாட்டிக்கொண்டு வெளியேறினாள்.

வாசற்படியில் ஆவலாய் நின்றிருந்த அரவிந்தை ஏறெடுத்தும் பாராமல்... பார்வையைத் தழைத்தபடி இறங்கிச் சென்றது இப்போது ஞாபகத்திற்கு வந்தது... அவளைக் கண் கலங்க வைத்தது.

'என்னால்... என்னால் தானே இப்படி நடந்தது? அரவிந்துக்கு என் மேல் இவ்வளவு காதலா?

உயிரை மாய்த்துக் கொள்ளத் துணிந்துவிட்டானே? அப்படி

என்றால்... அரவிந்த் என்னை எவ்வளவு ஆழமாக நேசிக்கிறான்.. நல்ல காலம் அரவிந்த் பிழைத்துக் கொண்டான். தப்பித் தவறி அவன் உயிர் பிரிந்திருந்தால்...? என் மனசாட்சியே என்னைக் கொன்று விடுமே?

இதற்கு மேலும் நான் மௌனமாய் இருப்பது தகுமா? அரவிந்திடம் என் காதலை வெளிப்படுத்திவிட வேண்டியது தான்'

உள்ளுக்குள் பவ்யா முடிவெடுத்து விட்டாள்.

வீட்டிற்குச் சென்றதும் ஒவ்வொரு கணமும் அவளது மனக் கண் முன் அரவிந்தின் முகம் வந்து வந்து போனது.

சாப்பிடப் பிடிக்கவில்லை. தூங்கப் பிடிக்கவில்லை. படிக்கப் பிடிக்கவில்லை. சதா சர்வ காலமும் அவனது நினைவு தான் அவளைச் சுற்றி வந்து வதைத்தது.

பெண்களின் பலவீனம் எது என்பதைப் புரிந்து அதில் அடித்து அவளை வீழ்த்தி விட்டிருந்தான் அந்தக் கயவன் அரவிந்த்!

இரக்க குணம் எளிதில் எதையும் நம்பி விடும் சுபாவம் தான்... அவளை காதலெனும் அதல பாதாளத்தில் தள்ளி விட்டது.

பதினைந்து நாட்கள் கழித்து தான் அவன் கம்ப்யூட்டர் சென்டருக்கு வந்தான். கிட்டத்தட்ட இரண்டு வாரங்கள் அவனைப் பாராமல் அவள் படாதபாடு பட்டுவிட்டிருந்தாள்.

அவனைக் கண்டதும் சட்டென்று பூவாய் மலர்ந்தாள்.

"அ... அரவிந்த்! எப்படி இருக்கீங்க? அயாம் ஸோ ஸாரி!

அன்னிக்கு உங்களைப் பத்தி நான் கேள்விப்பட்டதும் அப்படியே துடிச்சுப் போயிட்டேன்.

குற்ற உணர்வு என்னைக் குடைஞ்சு எடுத்துடுச்சு. மன்னிச்சுடுங்க... நா... நானும் உங்களை ரொம்பவே நேசிக்கிறேன் அரவிந்த்!" அவள் கூறியதும்... அரவிந்தின் விழிகளில் ஒரு கணம் அசாத்தியமான பளபளப்பு தோன்றியது.

பவ்யா தயக்கமாய் அவனது விழிகளை ஏறிட்டதும்...

சட்டென்று தனது நரித்தனமான பார்வையை மறைத்து... விழிகளில் சாந்தம் கலந்த அப்பாவித்தனத்தைத் தேக்கிப் புன்னகைத்தான்.

# 7

நூலகத்திலும், பூங்காவிலும், கோவில் பிரகாரத்திலும் அடிக்கடி சந்தித்து தங்களது காதலை வளர்த்துக் கொண்டனர்.

பவ்யா தனது இறுதியாண்டுத் தேர்வை எழுதி முடித்த கையோடு... வைத்தீஸ்வரன் ஒரு குண்டைத் தூக்கிப் போட்டார்.

அன்றிரவு அனைவரும் அரைவட்டமாய் அமர்ந்து சாப்பிட்டுக் கொண்டிருந்தனர்.

அம்மா சொர்ணம் தோசை வார்த்துப் போட்டுக் கொண்டிருந்தாள்.

"சொர்ணம்! வா வந்து உட்காரு. ஒரு முக்கியமான விஷயத்தை சொல்லணும்" வைத்தீஸ்வரன் பீடிகை போட்டார்.

"இதோ வந்துட்டேங்க..." கடைசி தோசையை வார்த்து முடித்து தட்டில் போட்டுக் கொண்டு வந்து அமர்ந்தாள் சொர்ணம்.

"நம்மபவ்யாவுக்குநல்லவரன்வந்திருக்குசொர்ணம்! மாப்பிள்ளையோட சொந்த ஊர் திருச்சியாம். படிச்சவரு... நல்ல வேலையில் இருக்கிறாரு... சொந்தமா வீடும் கொஞ்சம் நிலபுலன்களும் இருக்காம்.

என் பால்ய சிநேகிதன் குருசாமியோட பக்கத்து வீடு தானாம்! பவ்யாவுக்கு ஏத்த மாதிரி மாப்பிள்ளை ஜம்முனு இருப்பாராம்.

நாளைக்கு பொண்ணு பார்க்க வராங்க... குருசாமி தான் அழைச்சுட்டு வராப்பல... குருசாமி ஒரு விஷயத்தைச் சொன்னா... அது ரொம்ப சரியாத் தானிருக்கும்.

இந்த இடம் தகைஞ்சு வந்துடும்னு என் மனசுக்குத் தோணுது. பவ்யாவும் படிப்பை முடிச்சுட்டாள்லே... 'நல்ல இடம் கை நழுவ விட்டிராதே... அவங்களும் எதையும் எதிர்பார்க்க மாட்டாங்க'ன்னு குருசாமி அழுத்திச் சொன்னதும்... நான் சம்மதிச்சு அவங்களை வரச் சொல்லிட்டேன். நீ என்ன சொல்றே?"

"என்னங்க நீங்க...? என்கிட்ட போயி கேட்டுக்கிட்டிருக்கீங்க? நீங்க ஒரு முடிவெடுத்தா... அதை எண்ணிக்காவது நான் மறுத்துப் பேசியிருக்கேனா?

உங்க இஷ்டப்படி செய்யுங்க... நீங்க எது செஞ்சாலும் நல்லா இந்த

செய்தியைக் கேட்டதும்... இதயம் படபடத்தது.

வாய்க்குள் திணித்துக் கொண்ட தோசை... தொண்டையை விட்டு இறங்க மறுத்துப் புரட்சி செய்தது.

திகிலுடன் தகப்பனை விழித்துப் பார்த்தாள்.

"பாவம்! உன்னைப் போய் கேட்கிறேன் பாரு! நான் கிழிச்ச கோட்டை நீ என்னிக்காச்சும் தாண்டியிருக்கியா? 'நம்ம கிட்டப்போய் அப்பா என்னத்துக்கு கேள்வி கேட்கிறாருன்னு... திருதிருன்னு முழிக்கிறேயே?

மாப்பிள்ளைக்கு ஒரேயொரு தம்பியாம். மாப்பிள்ளையோட அம்மா ரொம்ப தங்கமானவங்களாம். உன்னோட நல்ல குணத்துக்கு நீ அமோகமா இருக்கப்போறே பவ்யா..." வைத்தீஸ்வரன் இடது கரத்தால் பவ்யாவின் உச்சந் தலையை வருடியதும் குற்ற உணர்வில் தலை குனிந்து கொண்டாள்.

மறுநாள் காலை பத்தரை மணிக்கு மாப்பிள்ளை வீட்டவர்கள் வந்து விட... அமர்க்களத்தில் வீடு இரண்டு பட்டு போனது நிஜம்!

வந்தவர்களுக்கு இவளை மிகவும் பிடித்துப் போய்விட... இவளது கூந்தலில் உரிமையாய் பூச்சூடி விட்டு... சகஜமாய் 'கையை நனைத்து'விட்டு போனார்கள்.

மறுநாள் அவள் அரவிந்தை சந்தித்து விவரம் தெரிவித்தாள். "வர்ற வைகாசியிலேயே கல்யாணத்தை வச்சுக்கலாம்னு முடிவே பண்ணிட்டுப் போயிட்டாங்க... எனக்கு ரொம்ப பயமா இருக்கு அரவிந்த்!"

"விஷயம் கைமீறிப் போயிட்டிருக்குல்ல...? எங்க வீட்டுலயும் நான் நம்ம மேட்டரைப் பேச முடியாது. எங்கப்பா அந்தஸ்தை விட்டுக் கொடுத்தாலும்.. ஜாதியை விட்டுத் தரவே மாட்டாரு. இதுக்கு ஒரே ஒரு வழிதான் இருக்கு பவ்யா! என் பேச்சை நீ கேட்பியா?"

"என்னங்க நீங்க? என் வாழ்க்கையே உங்க கையில தான் இருக்கு... உங்க பேச்சைக் கேட்காம இருப்பேனா? சொல்லுங்க... நான் என்ன செய்யணும்?"

"என்னை நம்பி வீட்டை விட்டு வரணும். வெளியூருக்குப் போய் கல்யாணம் பண்ணிக்கிட்டு... சில வாரங்கள் கழிச்சு ஊருக்கு வரலாம்.

கணவன் மனைவியாகிட்டா நம்மை யாரும் பிரிக்க முடியாது. பெரியவங்க கொஞ்ச நாளைக்கு 'தாம்தூம்'ன்னு குதிப்பாங்க.. பேரன் பேத்தி வந்துட்டா... ரெண்டு பக்க சொந்தமும் தன்னால வந்து ஒட்டிக்கும் பாரேன்"

தொடர்ச்சி 34-ம் பக்கம்

31-ம் பக்கத் தொடர்ச்சி

"ச... சரி அரவிந்த்!" காதல் அவளது கண்ணை முற்றிலும் மறைத்து விட்டிருந்தது. புத்தியை மழுங்கடித்து விட்டிருந்தது.

"நாளைக்கு சாய்ந்தரம் வீட்டை விட்டு வந்துடு. தேவைப்பட்ட புடவை நகைங்களை எடுத்துக்கோ. லக்கேஜ் சிம்பிளா இருந்தாத்தான்... யாருக்கும் டவுட் வராது. நீ நேரா இந்த பிளாட்டுக்கு வந்துடு. இது என் ஃபிரண்டோட பிளாட்! அட்ரஸ் பத்திரம்...!

பயப்படாதே... அங்க யாரும் இருக்கமாட்டாங்க. இருட்டற வரைக்கும் அங்க இருந்துட்டு ராத்திரி பதினொரு மணிக்கு மேல நாம்ப பஸ் ஏறிப் போயிடலாம்.

விடிஞ்சதும் திருவண்ணாமலையில நம்ம கல்யாணம். ஃபிரண்ட்ஸ் மூலமா எல்லா ஏற்பாடும் நடந்துடும். நாம்ப தங்கறதுக்கும் வீடும் தயாரா இருக்கும். நீ கவலையே படாதே. சரியா?"

விழிகளில் கண்ணீருடன் பலமாய் தலையாட்டினாள்.

மறுநாள் சனிக்கிழமை! மாலையில் அம்மா சொர்ணமும் தங்கை இனியாவும் தம்பி ரகுவும் ஆஞ்சநேயர் கோவிலுக்குக் கிளம்ப ஆயத்தமாயினர்.

"பவ்யா நாங்க எல்லாரும் ரெடியாயிட்டோம். நீ இன்னமும் முகம் கூட அலம்பிக்கலையே?" என்று அம்மா கேட்டாள்.

"வயிறு வலிக்கிற மாதிரி இருக்கும்மா. நா வரலை. நீங்க போயிட்டு வந்துடுங்கம்மா ப்ளீஸ்" சட்டென்று பொய் மூட்டையை அவிழ்த்துவிட்டாள்.

அவர்கள் சென்றதும், பீரோவைக் குடைந்தாள். நகைகள் எதுவும் அகப்படவில்லை. பெண் பார்க்கும் படலம் முடிந்ததும் மறுநாளே நகைகளை லாக்கரில் வைத்துவிட்டார்கள் போலும்!

கழுத்தில் செயின் கைகளில் ஒரு ஜோடி வளையல்கள் இரு மோதிரங்கள், காதுகளில் சிமிக்கி... என்று அவள் மீது கிடப்பதே எட்டு பவுனுக்கு மேல் தேறுமே!

செலவுக்கு ஆயிரம் ரூபாய் பணத்தை எடுத்துக் கொண்டாள். தனது புடவைகளை அடுக்கி வைத்து கொண்டு... வீட்டைப் பூட்டி சாவியை வழக்கம் போல் கோலப்பொடி டப்பாவில் போட்டு மூடி வைத்துவிட்டுக் கிளம்பினாள்.

தெருமுனையைத் தாண்டியதும் ஆட்டோ பிடித்துக்கொண்டு

அரவிந்த் தங்கியிருக்கும் பிளாட்டுக்கு வந்துவிட்டாள்.

"வா பவ்யா! அம்மாடி... எங்கே நீ கடைசி நிமிஷத்துல வராமலே இருந்துடுவியோன்னு நான் ரொம்ப பயந்துட்டேன். எங்க வீட்டுலே ஆபீஸ் விஷயமா வெளியூருக்குப் போக வேண்டியிருக்குன்னு... பொய் சொல்லிட்டு இங்க வந்துட்டேன்.

நம்ம ஃபிரண்ட்ஸ் எல்லா ஏற்பாடுகளையும் பக்காவா பண்ணி வச்சிருப்பாங்க... ராத்திரி ஆனதும் நாம்ப பஸ் பிடிச்சு போயிடலாம்.

அதோ பிளாஸ்க்ல காபி இருக்கு. பக்கத்துல ரெண்டு பார்சல்கள் இருக்கு பாரு... இட்லி, தோசை வாங்கி வச்சிருக்கேன். மதியம் பயத்துல நீ ஒண்ணும் சாப்பிட்டிருக்க மாட்டே... எடுத்து சாப்பிடு! நான் குளிச்சுட்டு வேற ட்ரஸ் மாத்திக்கிறேன்"

"அரவிந்த்! வீட்ல நகைங்க இல்ல... லாக்கர்லே வச்சுட்டாங்க போல... செலவுக்கு ஆயிரம் ரூபாய் மட்டும்தான் எடுத்துட்டு வந்தேன்"

அவனது முகம் ஒரு கணம் சட்டென்று இருண்டது. "அட நீ வேற! நகையா முக்கியம்? நீ கட்டின புடவையோட வந்தாலும் எனக்கு சம்மதம் தான். தங்கச்சிலை மாதிரி ஜொலிக்கிறியே... நீ என்னவளா ஆகப் போறே... அது போதாதா?" செல்லமாய் அவளது கன்னத்தைத் தடவிய போது... தீ பட்டாற்போல் விலகி ஒடுங்கி நின்றாள்.

"நான் குளிச்சுட்டு வந்துடறேன். நீ சாப்பிட்டுட்டு இரு" கூறிவிட்டு சட்டென்று குளியலறைக்குள் புகுந்து கொண்டான் அரவிந்த்.

கட்டிலில் அரவிந்தின் லக்கேஜ் தயாராய் இருந்ததை கவனித்தாள். இனம் புரியாத கலவரத்தில் இதயத்துடிப்பு எகிறிக் கொண்டிருந்தது. தலைவலி விண் விண் என்று தெறித்தது.

மதியம் வேறு அவள் சாப்பிடவில்லை. அம்மாவுக்குத் தெரியாமல் சாதத்தை அப்படியே கொட்டி விட்டாள். பயத்தில் நா உலர்ந்து போனது.

ஃபிளாஸ்க்கிலிருந்த காபியை குடிக்க எத்தனித்த தருணத்தில்... அரவிந்தின் செல்ஃபோன் சிணுங்கியது. கட்டிலில் செல்லை வைத்துவிட்டு சென்று விட்டிருந்தான்.

தயக்கமாய் செல்லை எடுத்து 'ஆன்' செய்தாள்.

"என்னடா அரவிந்த்! பட்சி மாட்டிக்கிச்சா? உனக்கு மச்சம்டா மச்சான். நாளைக்கு, கண் துடைப்புக்கு அவளுக்கு தாலி கட்டிட்டு ஒரு பத்து பதினைஞ்சு நாளைக்கு... திகட்டத் திகட்ட குடும்பம்

நடத்துவே...

அப்புறம் மும்பை சேட்டுக்கு வித்துடுவே... பணத்துக்கு பணமும் ஆச்சு! ஜாலிக்கு ஜாலியும் ஆச்சு... உன் முகராசிக்கு இத்தோட ஒரு டஜன் ஃபேமிலி கேர்ள்ஸ் வந்து மாட்டுதுங்க, பாரேன்!

அன்னிக்கு நாம்ப போட்ட தற்கொலை பிளான் நல்லா வொர்க் அவுட் ஆகி... பட்சியைக் கவிழ்த்திடுச்சு. போலிருக்கு? என்ஜாய் அரவிந்த்! குட் லக்!" மறுகணம் 'இணைப்பு' கட்டானது.

பவ்யாவுக்கு சம்மட்டியால் இதயத்தில் ஓங்கி அடித்ததைப் போல் வலித்தது. 'இந்தக் குரல்... கம்ப்யூட்டர் மாஸ்டரின் குரலைப் போல் இருக்கிறதே? அடப்பாவிகளா... எல்லாரும் கூட்டுக்களவாணித்தனம் செய்து... காதல் என்னும் புனிதமான ஆயுதத்தால்... என்னை வீழ்த்தி விட்டார்களே?

அரவிந்த் இவ்வளவு பெரிய பொறுக்கியா? அவனை நம்பியா என் வாழ்வை ஒப்படைக்க வீட்டை விட்டு வெளியே வந்தேன்?

இப்போது இவன் பிடியிலிருந்து தப்பித்தாக வேண்டுமே! அவள் ஓடிச் சென்று கதவைத் திறக்க முயன்றாள். முடியவில்லை. பூட்டிவிட்டு, சாவியை தன்னிடம் வைத்துக் கொண்டிருந்தான் போலும்.

பவ்யாவுக்கு திகிலில்... காலடியில் தரை நகர்ந்து செல்வதைப் போலிருந்தது.

# 8

"அப்பா! உங்களை எல்லாம் ஏமாத்திட்டு நான் வீட்டை விட்டு வந்ததுக்கு... கடவுள் எனக்கு பெரிய தண்டனை குடுத்துட்டாருப்பா... புத்தி கெட்டுப் போயி... முட்டாள் தனம் பண்ணிட்டேன் அப்பா. இங்கிருந்து நான் எப்படி தப்பிக்கப் போறேன்? நரகத்துல விழுந்துடுவேன் போலிருக்கே அப்பா" உள்ளுக்குள் இரத்தக் கண்ணீர் வடித்தாள் பவ்யா.

'அழுதால் மாட்டிக் கொள்வோம்' பயத்தில் கண்களைச் சிமிட்டி கண்ணீரை உள்ளிழுத்து கொண்டாள்.

'கடவுளே! என்னைக் காப்பாத்து... சுற்றும் முற்றும் பார்த்தாள். அரவிந்த் தனது சட்டையைக் கழற்றி கட்டிலின் மீதுதான் போட்டிருந்தான். பாய்ந்து ஓடிச்சென்று சட்டையை எடுக்க முனைந்த போது... 'க்ளக்' என்ற சபதத்துடன் பாத்ரூம் கதவைத் திறந்து கொண்ட அவன் வெளிப்பட்டான்.

"என்ன பவ்யா? எதுவும் சாப்பிடலையா? யாராச்சும் வந்து உன்னை என்கிட்டே இருந்து பிரிச்சுக் கூட்டிட்டுப் போயிடுவாங்கன்னு பயப்படறியா? திட்டமிட்டபடி நாளைக்கு நம்ம மேரேஜ் நடக்கும். அதை யாராலும் தடுக்கவே முடியாது. பயப்படாதே! நானிருக்கேன்லே?" உரிமையாய் அவளது தோளில் கை வைத்தான்.

"ச்சீ! கையை எடு" அவனது கையைத் தட்டி ஆங்காரமாய் உறுத்து விழித்தாள்.

"எதுக்கு கோபம்? நாளைக்கு தாலிகட்டி உன்னோட கணவனா உரிமையா தொட வந்தாலும் இப்படித்தான் கோபப் படுவியா பவ்யா?" கொஞ்சலாய் கேட்டான்.

"ஒரு டஜன் அப்பாவிப் பொண்ணுங்களுக்கு தாலி கட்டி மோசம் பண்ணி சேட்டுகிட்டே வித்து... அந்தப் பணத்துல உடம்பு வளர்த்துட்டு திரியறியே? இதுக்கு நீ பேசாம தூக்கு மாட்டிட்டுத் தொங்கலாம் ராஸ்கல்... பொறுக்கி!" அவளையும் மீறி வெடித்து விட்டாள்.

"ஓ... உனக்கு எல்லாம் தெரிஞ்சு போச்சா? எப்படி...? சரி... விடு! எதுக்கு கல்யாணம் காட்சின்னு மெனக்கெடணும்? நேரா அரங்கேற்றத்துக்கு போயிட வேண்டியது தான்" நரித்தனமாய் சிரித்தபடியே நெருங்கினான்.

## யோசனை

**இ**ரவில் தலையணை அடியில் மருதோன்றி பூக்கொத்தை வைத்துப் படுத்தால் நன்கு தூக்கம் வரும்.

**ஜா**திக்காய், சந்தனம், மிளகு ஆகிய சரக்குகளை சம அளவில் எடுத்து சேர்த்து அரைத்து இந்த விழுதைத் தொடர்ந்து தடவி வந்தால் முகப்பரு கொட்டிப் போய்விடும்.

**செ**ம்பருத்தி இலையை கொதிக்கும் வெந்நீரில் போட்டு கை பொறுக்கும் சூடு வந்தவுடன் இலையை எடுத்துப் பிழிந்தால் அருமையான ஷாம்பு ரெடி.

- ஹரிஹரன்

"டேய்...கிட்ட வராதே! ஒழுங்கு மரியாதையா கதவைத் திறந்து விட்டுரு... என்னை நாசம் பண்ணிடாதே... விட்டுரு... உன்னைக் கெஞ்சிக் கேட்டுக்கிறேன்" பின்னால் நகர்ந்தவள் அந்த டேபிளின் மீது மோதிக் கொண்டாள்.

அந்த டி.வி.டேபிளின் மீது அழகுக்காக வைக்கப்பட்டிருந்த பித்தளைப் பூஜாடி 'கலிங்' என்று சரிந்து உருண்டு அவளது உள்ளங்கையில் மோதியதும்... சட்டென்று அதை வாகாய் பிடித்துக் கொண்டாள்.

'தன் பெண்மையைக் காப்பாற்றிக் கொள்ள வேண்டும்'

என்ற உத்வேகத்தில் அவளுக்கு எங்கிருந்தோ அவ்வளவு தைரியமும், ஆவேசமும் ஆங்காரமும் வெறியும் ஏற்பட்டன.

கண்களில் தீப்பொறி பறக்க 'காட்டு ரண பத்ரகாளி'யாய் ரௌத்தி ரத்துடன் "பொண்ணுங்கன்னா வெறும் போகப் பொருள்னு நினைச் சியாடா? யூ ஸ்கௌண்டரல்! ஒரு டஜன் பொண்ணுங்களை நரகத்துல தள்ளியிருக்கியே... இந்தப் பாவம் உன்னை சும்மா விடாதுடா! என்னையும் அந்த லிஸ்ட்டுலே சேர்க்கலாம்னு பார்க்கிறியா?

இந்த பவ்யாவை பத்தாம் பசலின்னு நெனச்சுட்டியாடா ராஸ்கல்" பித்தளை ஜாடியால் ஓங்கி அவன் தலையில் ஒரு போடு போட்டாள்.

இப்படியொரு ஆயுதம் அவளது கைக்குக் கிடைக்கும் என்று அரவிந்த் சற்றும் எதிர்பார்க்கவில்லை. ஒரே அடியில் தலையைப் பிடித்துக் கொண்டு இரண்டாக மடங்கிச் சரிந்த போது... மீண்டும் ஆங்காரமாய் ஒரு போடு போட்டாள்.

மண்டை உடைந்து குபுகுபுவென்று இரத்தம் முகத்தில் வழிய சரிந்தான். "உன்னை விட மாட்டேன்டி... உலகத்துல எந்த மூலையில இருந்தாலும் உன்னை நிர்மூலமாக்காம விடமாட்டேன்..." என்று அவன் புலம்பியதைக் காதில் போட்டுக் கொள்ளாமல், மும்முரமாய் அவனது சட்டையை எடுத்துத் துழாவினாள்.

சாவி அகப்பட்டதும் தனது லக்கேஜை தூக்கியபடி கதவைத் திறந்து ஓட்டமும் நடையுமாய் விரைந்தாள்.

'இந்த தடியன் அரவிந்தனின் சகாக்கள் பக்கத்தில் எங்காவது தான் தங்கியிருப்பார்கள். என்னைத் தப்பிக்க விடக்கூடாது என்ற வெறியில் அவர்களுக்கு ஃபோன் செய்து விட்டால்... என் கதி அவ்வளவுதான்'

பயத்தில் கால்கள் துணியாய் துவண்டன. அவள் பயந்தது போலவே ஒரு டாக்ஸி சீறலாய் வந்தது; இரண்டு தலைகள் எட்டிப் பார்த்து "டேய் அவதான் போலிருக்குடா கர்ஜித்ததும்... உஷாராகி கையிலிருந்த பேக்கை போட்டுவிட்டு... பக்கவாட்டு சரிவில் இறங்கி கண் மண் தெரியாத இருளில் ஓடினாள்.

அது... ஒரு சேரிப் பகுதி போலும்! மூச்சிரைக்க வெகு தூரம் ஓடியவளுக்கு தலை சுற்றியது. 'இதற்கு மேல் ஓட உடம்பில் சக்தியில்லை. அவர்களிடம் மாட்டினால் நரகம்...! கடவுளே! எனக்கு நீதான் கதி' என்றபடி குனிந்து அந்த குடிசைக்குள் புகுந்து விட்டாள்.

அரிக்கேன் விளக்கு வெளிச்சத்தில் விறகு அடுப்பை மூட்டி சமைத்துக் கொண்டிருந்த கிழவி திரும்பிப் பார்த்தாள்.

“பாட்டிம்மா! என்னைக் காப்பாத்துங்க... ஒரு சதிகார கும்பல் என்னைத் துரத்துறாங்க... மாட்டிக்கிட்டா என்னை மீளவே முடியாத நரகத்துல தள்ளிடுவாங்க... அடைக்கலம் கொடுங்க பாட்டிம்மா... உங்களுக்குப் புண்ணியமா போகும்” தழுதழுத்தபடி கையெடுத்துக் கும்பிட்டாள்.

“பயப்படாதே தாயீ! நானிருக்கேன்” மனமிரங்கிய கிழவி குடிசைக் கதவை சாற்றிக் கொண்டு வெளியேறி “ஏலேய் இசக்கி! மாரி! நம்ம ஏரியாவுக்குள்ளே காலிப் பசங்க புகுந்துட்டு அமர்க்களம் பண்றாப்பல தெரியுது... வேடிக்கையாடா பாத்துட்டு இருக்கீங்க? காலை ஒடிச்சு துரத்துங்கடா” உரத்துக் குரல் கொடுத்துவிட்டு மீண்டும் குடிசைக்குள் வந்து பவ்யாவை ஏறிட்டாள்.

“இனி பயமில்லை தாயீ! நீ யாரு? என்ன வெவரம்? வெளக்கமா சொல்லு... விடிஞ்சதும் பத்திரமா உன்னைக் கொண்டு வூட்டுல பத்திரமா சேத்துப்புடறேன்”

“ரொ... ரொம்ப நன்றி பாட்டிம்மா”

மறுநாள் காலை விடிந்ததும் கிழவி தனது மகனை உதவிக்கு அழைத்துக் கொண்டு பவ்யாவை ஆட்டோவில் ஏற்றி... வீட்டிற்கு வந்து வைத்தீஸ்வரனைப் பார்த்துப் பேசி விட்டுவிட்டுச் சென்றாள்.

“எ... என்னை மன்னிச்சுடுங்கப்பா... புத்தி கெட்டுப் போயி தப்புப் பண்ணிட்டேன். ஆனா நான் உங்க பொண்ணுப்பா... அவன் ரொம்ப கெட்டவன்னு தெரிஞ்சதும் அவனை அடிச்சுப் போட்டுட்டு... என் பெண்மையைக் காப்பாத்திக் கிட்டேன்.

**பி**ரேசில் நாட்டில் பிரேன்கோ நகரில் அமைக்கப்பட்டுள்ள பொதுத் தொலைபேசி பூத்துகளில் தொலைபேசியிலும் பேசலாம். மழை பெய்யும்போது சைக்கிள்களில் செல்வோர் இப்படி அங்கே ஒதுங்கியும் தங்களைப் பாதுகாத்துக் கொள்ளலாமாம். ரொம்ப உபயோகம்தான்.

- க.ரவீந்திரன்



எ... என்னை அடிங்கப்பா... உதைங்கப்பா... இப்படி பாராமுகமா இருக்காதீங்கப்பா" கதறினாள் பவ்யா.

"உன் மேல எவ்ளோ பாசம், நம்பிக்கை வச்சிருந்தேன். என் முகத்துல கரியைப் பூசிட்டியே? உன்னைக் காணோம்னதும் எப்படித் துடிச்சுப் போயி தேடினோம்? அக்கம் பக்கத்துல விஷயம் தெரிஞ்சு துக்கம் விசாரிக்க ஆரம்பிச் சுட்டாங்க... நீ அந்த சண்டாளன் கூட லைப்ரரி, பூங்காவுல சுத்தின விஷயமும் நேத்து தான் என் காதுக்கே வந்தது.

மாப்பிள்ளை யோட சித்தப்பாவும், சித்தியும் மெட்ராஸ் வரைக்கும் ஒரு வேலையா வந்திருந்தாங்களாம்... இவ்ளோ தூரம் வந்திருக்கோம்... பொண்ணை ஒரு எட்டு பார்த்துட்டுப் போகலாம்னு... நேத்து எட்டு மணி வாக்குல திடீர்னு வந்தாங்க... நீ ஓடிப் போயிட்டியே?

இங்க நடந்த அமளி துமளியைப் பார்த்துட்டு... மௌனமா திரும்பிப் போயிட்டாங்க... இதோ கொஞ்ச நேரத்துக்கு முன்ன... 'நல்லகாலமா... பொண்ணைப் பத்தின விஷயம் எங்களுக்குத் தெரிஞ்சிடுச்சு. நாங்க வேற பொண்ணைப் பார்த்துக்கிறோம்'னு மூஞ்சியில அடிச்ச மாதிரி ஃபோன்லே சொல்லிட்டாங்க... போச்சு! எல்லாம் போச்சு! மானம், மரியாதை அத்தனையும் காத்துல பறந்துடுச்சே?

பத்திரமா நீ திரும்பி வந்துட்டேன்னு சொல்றியே! ஊரு உலகம் நம்புமா? இனிமே உன்னை எப்படிக் கரையேத்தப் போறேன்? உன் தங்கச்சி இனியாவை யார் கட்டுவா? குடும்பத்துக்கே களங்கத்தை ஏற்படுத்திட்டியே? இனி நான் தலைநிமிர்ந்து நடக்க முடியுமா? உன் மேல பாசத்தைக் கொட்டி வளர்த்ததுக்கு... நல்ல வெகுமானம் குடுத்துட்டே!

இப்படிப்பட்ட அவமானத்தைத் தேடித் தர்றதுக்கு முன்ன... உன்னை பெத்த பாவத்துகு எங்களுக்கு சாப்பாட்டுலே விஷத்தைக் கலந்து வச்சுட்டு நீ ஓடியிருந்தா... உனக்கு எவ்ளோ புண்ணியமா போயிருக்கும்... தெரியுமா?"

அப்பாவின் ஒவ்வொரு வார்த்தைகளும் அவளது இதயத்தைக் கோடாலியால் பிளப்பது போலிருந்தது.

முகத்தில் அறைந்து கொண்டு குமுறி அழுதாள். தம்பி, தங்கையை ஏறெடுத்துப் பார்க்கவே கூசியது.

அம்மா சொர்ணம் கதறிய கதறலைப் பார்த்த போது... 'பூமி இரண்டாகப் பிளந்து தன்னை விழுங்கி விடக்கூடாதா?' என்று மனம் ஏங்கியது.

அவளது விஷயம் காட்டுத் தீயாய் பரவி விட்டதால்... வெளியூரில் வரன் பார்க்க அப்பா ஏற்பாடு செய்தார். வரன் கைகூடி வரும்போது... எப்படியோ விஷயம் கசிந்து தட்டிக் கழிந்து போய்க் கொண்டே இருந்தது.

இதற்கிடையில் அந்த அரவிந்தும் அவனது சகாக்களும் ஏதோவொரு விவகாரத்தில் மாட்டி போலீஸாரால் கைது செய்யப்பட்டதாக... தினகரனில் அவள் படித்தாள்.

இப்பேர்ப்பட்ட கயவர்கள் செல்வாக்கை பயன்படுத்தி விரைவில் வெளியே வந்து தொலைப்பார்களே? என்று பயந்து செத்தாள்.

கடைசியாக நரேந்திரன் அவளைப் பெண் பார்க்க வந்தான்.

'அவளை அவனுக்குப் பிடித்துப்போய்விட்டது' என்று அறிந்ததும்... அவள் இருதலைக் கொள்ளி எறும்பாய் தவித்துப் போனாள்.

# 9

அரவிந்தை விரும்பித் தொலைத்த பாவத்திற்கு... திருமணமே செய்து கொள்ளாமல் அப்படியே காலம் கழித்து விடலாம் என்றிருந்தது.

எப்போது அரவிந்த் ஒரு பெண் பித்தன்... இளம்பெண்களை ஏமாற்றி மோசம் செய்து விபச்சாரத்திற்கு விலை பேசும் கடைந்தெடுத்த அயோக்கியன்... என்று தெரிந்த மறுகணமே... அவனை மனதிலிருந்து தூக்கியெறிந்து விட்டாள் பவ்யா.

இப்பேர்ப்பட்ட அயோக்கியனுக்குப் போய் இதயத்தில் இடமளித்து பெற்றவர்களுக்கு அவமானத்தைத் தேடித் தந்து விட்டோமே?' என்று உள்ளூர அனலிடைப்பட்ட புழுவாய் துடித்தாள்.

தன் பெண்மைக்கு எந்தக் களங்கமும் ஏற்படாமல் தப்பித்து வந்துவிட்டாலும்... ஏதோ ஒரு குற்றவுணர்வு அவளை செல்லாய் அரித்தது.

இன்னொருவனுக்கு மாலையிட மனம் கூசியது.

திருமணம் செய்து கொள்ளாமல் அப்படியே இருந்துவிடவும் முடியாது. பெற்றவர்கள் வயிற்றில் நெருப்பைக் கட்டிக் கொண்டு... இவளைக் கரையேற்றி விடத் துடியாய் துடிக்கின்றனர்.

இவள் கரையேறாமல் தங்கிவிட்டால்... தங்கை இனியாவின் வருங்காலமும் கேள்விக் குறியாகிவிடலாம் என்ற பயம் வேறு!

தெரிந்தோ தெரியாமலோ மாபெரும் பிசகைச் செய்துவிட்டாள். அதை மூடி மறைத்து ஒரு நல்லவனுக்கு மாலை சூடி... ஏமாற்றி வாழ அவள் மனம் முரண்டியது.

"நாங்க பண்ணின புண்ணியம்... நரேந்திரன் தம்பி மூலமா வந்து இருக்கு... இப்பேர்ப்பட்ட நல்ல மனுஷன் உனக்கு மாப்பிள்ளையாகக் கிடைக்க... நீ போன ஜென்மத்துல தவம் பண்ணியிருக்கணும்.

உன்னைக் கையெடுத்துக் கும்பிட்டுக்கிறேன். மறுத்து எதுவும் பேசாம.. அவருக்கு கழுத்தை நீட்டு...! உன்னைப் பெத்த பாவத்துக்கு... நீ எனக்காக ஒரே காரியம் பண்ணு...

தப்பித் தவறிக் கூட உன்னோட கடந்த காலத்தைப் பத்தி அவர்கிட்ட எதுவும் சொல்லிடாதே... ஒரு நல்ல மனைவியா பதவிசா நடந்து... எங்க பேரைக் காப்பாத்து! அது போதும்" கண் கலங்க, குரல் பிசிறடிக்க அப்பா பேசியபோது... பவ்யாவுக்கு அடிவயிற்றைப் பிசைந்தது.

"நீங்க சொல்றபடியே நா... நான் நடந்துக்கிறேன் அப்பா"

நரேந்திரனுக்கு சொல்லிக் கொள்ளும்படியாக உறவுத் தலைகள் இல்லையாதலால்... கோவிலில் மிக எளிய முறையில் திருமணம் நடந்தேறியது.

சீர், செனத்தி பாத்திர பண்டங்கள் என்று எதுவும் தேவையில்லை என்று கண்டிப்பாக அவன் சொல்லிவிட்டதால்... இவளுக்கு அடித்த யோகத்தைப் பார்த்து ஊரே வியந்து மூக்கில் விரலை வைத்தது.

திருமணம் முடிந்த தினமே காரில் மணமக்கள் தேனிலவுக்காக... மைசூர் செல்வதற்கு ஏற்பாடு செய்திருந்தான் நரேந்திரன்.

பெற்றவர்களிடம் ஆசிகள் பெற்றுக் கொண்டு கணவனுடன் காரில் புறப்பட்ட பவ்யாவின் மனம் கல்லாய் சமைந்திருந்தது.

குற்ற உணர்வு ஒரு புறமும்.. 'கடந்த கால வாழ்க்கையைப் பற்றி கணவனுக்குப் போய்ச் சேர்வதற்குள்... வேருடன் பறித்துப் போட்ட கீரைத் தண்டாக வாடிப் போய் சுருண்டாள்.

அழகுப் பெட்டகமாக மனதை வசீகரித்த புது மனைவிக்கு காய்ச்சல் என்றதும்... நரேந்திரன் பதறிப் போய் விட்டான்.

தேனிலவுக்காக அவன் ஏற்பாடு செய்திருந்த அறையில் கிட்டத்தட்ட ஒரு வாரத்திற்கும் மேலாகத் துவண்டு கிடந்தவளுக்கு... முகம் சுளிக்காமல் குழந்தையை கவனிப்பது போல் பரிவுடன் சேவை செய்தான்.

## யோசனை

**ப**ழைய நான்கு முழ வேட்டியில் நான்கைந்து பைகள் தைத்துக் கொள்ளுங்கள். தானியங்களை முளைகட்ட, திரித்த பாலை வடியவைத்து பனீர் செய்ய உபயோகப்படும்.

**வெ**ள்ளைப் பூண்டை பாலில் வேக வைத்து நசுக்கி முகப்பரு மீது தடவி வந்தால் பருக்கள் உடன் குணமாகும்.

- ஹரிஹரன்.

"கொஞ்சம் பிரட்டை சாப்பிட்டுட்டு மாத்திரை போட்டுக்கோ பவ்யா! டாக்டர் சொன்னபடி கேட்டால்தானே காய்ச்சல் இறங்கும்?" மாத்திரையை விழுங்க வைத்து சூடான பாலைப் பருக வைத்து அவளது கூந்தலைக் கோதிவிட்டுப் படுக்க வைத்து போர்வையைப் போர்த்தி விட்டான்.

தேனிலவு கொண்டாட ஆசையாய் மைசூர் வந்தவன்... மனைவி நோயில் சுருண்டு கிடக்கிறாளே? என்று துளிகூட ஏமாற்றம் தலைதூக்காமல்... சிரத்தையாய் அவளிடம் கரிசனம் காட்டியதைக் கண்டு... வியப்பின் விளிம்பிற்கே சென்ற விட்டாள் பவ்யா.

பத்து நாட்கள் கழித்து குன்றத்தூர் – தோட்டத்துக்கு பங்களாவுக்கு வந்ததும் அவளுக்கு காய்ச்சல் விடவில்லை.டைபாயிட் ஜுரத்தில் விழுந்தவள் கிட்டத்தட்ட ஒரு மாதம் கழித்துத் தான் தேறி எழுந்தாள்.

இடையில் ஒருமுறை வைத்தீஸ்வரனும் சொர்ணமும் மகளைப் பார்க்க வந்தனர். மகளது நிலை கண்டு ஆடிப் போய் விட்டாள் சொர்ணம்.

"அம்மாடி! உன் மனசு கிடந்து தவியாய் தவிக்கிறது எனக்கு நல்லாப் புரியுதும்மா... கல்யாணத்துக்கு முன்னால இன்னொருதனை மனசுல நெனச்சுட்டோமே?ன்னு குற்ற உணர்வுல சுருண்டு கிடக்கிறே?

புது மாப்பிள்ளை ஆசாபாசங்களுக்கு மூட்டை கட்டி வச்சுட்டு... ராப் பகலா உனக்காக கண் முழிச்சு உன்னை கவனிச்சுக்கிட்டாரே? அந்தப் பாவிப் பயல்... இவரோட கால் தூசுக்கு ஈடு ஆவானா?

நீ ரொம்ப கொடுத்து வச்சவ பவ்யா! பழைய விஷயத்தை மறந்துட்டு புதுப்பிறவி எடுத்த மாதிரி நினைச்சுக்கோ...

'உனக்குஉடம்புமுடியலைன்னு கேள்விப்பட்டா... எங்க மனசு தாங்காதுன்னு மாப்பிள்ளை ஃபோன்ல எதுவும் சொல்லலை. தெரியுமா?

இந்தஉத்தமர்கூட நீவாழ்வாங்கு

வாழணும். அதான் எங்க ஆசை! புது பவ்யாவா... அவர் மனசு புரிஞ்சு நடந்துக்கோ ராஜாத்தி"

தனிமையில் மகளை நெஞ்சோடு அணைத்துக் கொண்டு ஆறுதல் கூறினாள் சொர்ணம்.

"சரிம்மா... அ... அவர் என் மனசுல ரொம்ப உயர்ந்த ஸ்தானத் துல உட்கார்ந்துட்டாரும்மா... இப்பேர்ப்பட்டவருக்கு நான்... நான்..." மனம் புழுங்கினாள்.

"அந்தப் பேச்சை எடுக்கப் படாது. நீ புது பவ்யா! அவ்வளவுதான் நீ நடக்கப் போறதை மட்டும் நினைக்கணும்... பேசணும்" அன்புடன் அதட்டினாள் சொர்ணம்.

"சரிம்மா" கண்களைத் துடைத்துக் கொண்டாள். மனத்தை திடப்படுத்திக் கொண்டதும் காய்ச்சலும் மட்டுப்பட்டது.

நரேந்திரனை கணவனாக மட்டுமல்ல... தெய்வமாகவே அவள் போற்றத் தொடங்கினாள்.

அவன் மனதிற்குப் பிடித்த வகையில் வீட்டைப் பராமரித்து அலங்கரித்து, தோட்டத்தை கவனித்து... சுவையாக மணக்க மணக்க சமைத்துப் போட்டு... நல்லதொரு மனைவியாக, தோழியாக, தாயாக அவனுடன் ஒன்றிப் போய்விட்டாள்.

ஆனாலும் அடி மனதில் குற்ற உணர்வு புழுவாகக் குடைந்து அவளை முழு மனதாக மகிழ்ச்சியில் திளைக்க விடாமல்... இம்சித்துக் கொண்டே இருந்தது நிஜம்!

கடிகார பெண்டுலம் 'டண்...டண்' என்று இருமுறை ஓங்கி ஒலித்ததும் திடுக்கிட்டு குழந்தையைப் பார்த்தாள் பவ்யா.

இரவு இரண்டு மணி ஆகி விட்டதா? பழைய நினைவுகள் நிழலாய் ஊர்ந்த வண்ணம் இருந்ததால் அவளுக்குத் தூக்கமே பிடிக்கவில்லை.

மறுநாள் காலை எட்டு மணிக்கு வழக்கம் போல் நரேந்திரன் பேசினான். "பவ்யா! உனக்கொரு 'சர்ப்ரைஸ்' கொடுக்கப் போறேன் பாரு..." என்று ஏதேதோ பேசினான்.

அரவிந்தை நேரில் பார்த்துவிட்ட பயத்தில்... அவளுக்கு சகஜமாய் பேச வரவில்லை.

நேற்று மாலையிலிருந்து அவளுக்கு கையும் ஓடவில்லை. காலும்

ஓடவில்லையே! ஃபோனை குழந்தையிடம் கொடுத்துவிட்டு நகர்ந்து விட்டாள்.

அப்பாவும் மகளும் லொட லொடவென்றபேசிக் கொண்டிருந்தபோது... இவள் வாசலில் நின்று விரக்தியாய் தோட்டத்தை வெறித்தாள்.

அடுத்து வந்த ஐந்து நாட்களும் நத்தையாய் நகர்ந்தன.

வெளியில் எங்கும் தலை காட்டாமல் வீட்டோடு முடங்கிக் கிடந்தாள் பவ்யா.

குழந்தை முகம் வாடிக் கிடக்கிறாளே... என்று பாசத்தில் அவளது மனம் பாகாய் கரைந்தது. பெரிய பந்தை அவளிடம் கொடுத்து முன் பக்கத்துத் தோட்டத்தில் விளையாட வைத்தாள்.

மூன்று சக்கர சைக்கிளை இறக்கி வைத்து அதை ஓட்ட அனுமதித்ததும்... குதூகலமாய் குழந்தை தென்னை மரத்தைச் சுற்றி வந்தது.

காம்பவுண்ட் கேட் திறக்கப்படும் சப்தம் கேட்டதும் திரும்பிப் பார்த்தவளுக்கு... உச்சந்தலையில் திடீரென்று யாரோ தீ வைத்தாற் போலிருந்தது.

சூயிங்கம்மை மென்றபடி வெகு உரிமையாய் தோட்டத்தைக் கடந்து வீட்டிற்குள் வந்தான் அரவிந்த்.

## 10

"என்ன பவ்யா? இப்படி 'ஸ்டன்' ஆகி நின்னுட்டே இருந்தா... என்ன அர்த்தம்? 'வாங்க அரவிந்த'னு வாய் நிறைய வரவேற்க மாட்டியா?

உன்னைப் பார்க்கணும்னு எவ்ளோ ஆசையா வந்திருக்கேன்... என் மனசு உனக்குப் புரியலையா செல்லம்?

இத்தனை வருஷமா நீ இருக்கிற இடம் தெரியாம... எங்கெல்லாம் தேடித் தவிச்சேன். தெரியுமா?

வலை வீசித் தேடாத குறைதான்! இனிமே நீ கிடைக்கவே போறதில்லை... ஒரு வாட்டிகூட கண்ணுல பார்க்க முடியாதுபோல'ன்னு ஒரு சலிப்பு தட்டும்.

அப்படி சலிப்பு தட்டறப்போ எல்லாம் சுருண்டு படுத்துக்குவேன். மறுநாளே என் நம்பிக்கையைத் திரட்டிக்கிட்டு... என் முயற்சியைத் தொடருவேன். நம்ம காதல் மேலே எனக்கு அவ்ளோ நம்பிக்கை!



**உ**த்திரப்பிரதேச மாநிலத்தில் பூங்கா ஒன்றில் யானைகளை இப்படி சிற்பமாக செதுக்கியுள்ளார்கள். மாநிலத்தை ஆளும் பகுஜன் சமாஜ் கட்சியின் சின்னம் யானை என்பதால், எதிர்க்கட்சிகள் இதற்கு எதிர்ப்பு தெரிவித்துள்ளனர்.

**- க.ரவீந்திரன்**

*என் நம்பிக்கை பொய்க்கலை. என் முயற்சியும் வீண் போகலை பார்த்தியா பவ்யா?"*

*மிகப்பெரிய அனகோண்டா பாம்பு அவளை விழுங்க வந்துவிட்டதைப் போன்ற அதிர்ச்சியில் உறைந்து போய் நின்றிருந்தாள்.*

*மிகப்பெரிய அனகோண்டா பாம்பு அவளை விழுங்க வந்துவிட்டதைப் போன்ற அதிர்ச்சியில் உறைந்து போய் நின்றிருந்தாள்.*

*"போச்சு! எல்லாம் போச்சு! என் அழகான குருவிக்கூட்டைக் கலைக்க படமெடுத்து வந்துட்டானே! இத்தனை வருஷமா பயந்து செத்திட்டிருந்தேனே? நிஜத்தில் வந்து நிற்கிறானே?*

*இன்னிக்கோட இந்த அழகான வாழ்க்கைக்கு முற்றுப்புள்ளி வச்சுட வேண்டியதுதானா? தெய்வமே... முருகா! இந்தப் பாவிகிட்டே இருந்து என்னைக் காப்பாத்து! உனக்கு குளிரக் குளிரப் பாலாபிஷேகம் பண்றேன்"*

*உள்ளூர முருகனை வேண்டி உதவிக்கு அழைத்தாள்.*

*"என்ன பவ்யா? கேட்டுட்டே இருக்கேன். பதிலையே காணோம்? உரிமையாய் சாவதானமாய் சோபாவில் அமர்ந்தவனை... எரித்து விடுவது*

## கவிதை முற்றம்

* சித்தன்ன வாசல்
அஜந்தா ஓவியங்கள்
என் வீட்டுச் சுவரில்
–குழந்தையின் கிறுக்கல்கள்!

* உயிர் வீட்டை
எரிக்கும் தீப்பந்தம்
–சிகரெட்!

* வானச் சல்லடையில்
இத்தனை துளைகளா...
–நட்சத்திரங்கள்!

* அரையாடை உடுத்திய
அந்த நடிகை
அறிவித்தாள்...
'நானும் காந்தியவாதி...!''

- குடந்தை பாலு

போல் பார்த்தாள். தைரியத்தைத் திரட்டிக் கொண்டாள்.

"முதல்லே எந்திரி! திறந்த வீட்டுக்குள்ளே நாய் நுழைஞ் சாப்பல... நீ பாட்டுக்கு உள்ளே வந்து உட்கார்ந்துட்டே... போடா வெளியே!

'காதல்'ங்கிற வார்த்தையை உச்சரிக்க... உனக்கு ஏதாச்சும் தகுதி இருக்காடா? காதல் ரொம்பப் புனிதமானதுதான்!

ஆனா... கல்யாணத்துக்கு முன்னால ஒரு வயசுப் பொண்ணு காதலிக்கவே கூடாதுடா...

பெத்தவங்க எவ்வளவோ கஷ்டப்பட்டு வளர்த்து படிக்க வைக்கிறாங்க... அவங்களே... எதிர்காலவாழ்க்கையை நல்லபடியா அமைச்சுக் கொடுக்கட்டும்னு... பொண்ணுங்க மனசை அலைபாய விடாம கவனமா இருக்கணும்.

கருத்தையும் கவனத்தையும் சிதறி காதல்லே விழுந்தா... என் கதி தான்!

உன்னை மாதிரி பசுத்தோல் போர்த்தின புலிகிட்டே மாட்டிக்கிட்டா...கதை கந்தல்தான்! நல்ல காலம் எந்த சேதாரமும் இல்லாம நான் தப்பிச்சேன்.

தப்பிச்சு வந்த எனக்கு கடவுள் நல்ல 'வரனைத்' தரல்லே... நல்ல வரத்தைத் தந்தாரு... கண்ணியமானவர்... நல்லவர்... உத்தமருக்கு வாழ்க்கைபட்டும்... தாமரை இலை தண்ணி மாதிரி சந்தோஷத்துல மனம் ஒட்ட முடியாம.. உன்னால... உன்னைக் காதலிச்ச பாவத்தை நினைச்சு நினைச்சே... நான் தினமும் அணு அணுவா செத்துட்டிருக்கேன்டா ராஸ்கல்!

இப்ப எதுக்கு என்னைத் துரத்திட்டு வந்தே? இந்த பவ்யாவைப் பத்தி தான் உனக்கு நல்லாவே தெரியுமே? நான் கொலை பண்றதுக்கு கூட அஞ்சமாட்டேன்டா...

நான் பொறுமையை இழக்கிறதுக்கு முன்னால ஓடிப் போயிடு... போடா!'' பெண் சிங்கமாய் கர்ஜித்தாள்.

“கோபத்துல கூட நீ ரொம்பவே அழகா இருக்கே பவ்யா! இவ்ளோ தைரியமா பேசற நீ... அன்னிக்கு என்னைப் பார்த்ததும் பீதி அடைஞ்சு ஸ்கூட்டியை படுவேகமா ஓட்டிக்கிட்டுப் போனே?

அப்படி ஓடினா நான் கண்டுபிடிக்க மாட்டேனா? ஸ்கூட்டியில நம்பர் பிளேட் இருக்கு.. வழக்கமா நீ வாங்கற மருந்துக்கடை இருக்கு... இந்த ஏரியா ரொம்ப சின்னதுதான்!

இன்னாருன்னு அடையாளம் சொல்லி... நாலு பேருகிட்டே விசாரிச்சா... ஈஸியா துப்பறிஞ்சுடலாம்.

இன்னிக்குக் காலையில இந்த வீட்டு வேலைக்காரி நாகம்மாகிட்டே பேச்சு கொடுத்தேன்... உன்னோட கஸின் நான்னு அறிமுகப்படுத்திக்கிட்டேன்.

உன் கணவன் நரேந்திரன் வெளியூருக்குப் போயிருக்கிற விவரத்திலிருந்து.. உன் குழந்தைக்கு சளி பிடிச்சது வரைக்கும் எல்லா டீடெய்ல்ஸையும் நான் கறந்துட்டேன்.

என்னைப் பத்தி தான் உனக்கு நல்லாத் தெரியுமே? ஒரு வாட்டி மாட்டி உள்ளே போனேன் தான்... போன சுருக்குல வெளியில வந்ததிலிருந்து உன்னைத் தேடிகிட்டு தானிருக்கேன்.

நான் இன்னமும் மாறவே இல்லை. என்னோட ராஜ லீலைகள் தொடர்ந்துகிட்டு தானிருக்கு. நான் வச்ச குறியில இருந்து எந்த மானும் தப்பிச்சதே இல்லை...

நீ தப்பிச்சுக்கிட்டே! அதிலும் ரொம்ப அழகான பொன்மான். உன்னை அடைய முடியலேங்கிற வெறி... உள்ளூர கனன்றுகிட்டே இருக்கு பவ்யா! என்னை அடிச்சுப் போட்டுட்டு ஓடினே இல்லே?

நீ உன் கணவரோட எப்பவும் போல உன் லைஃபை தொடரலாம். நான் குறுக்கே வரமாட்டேன்.

ஒரே ஒருநாள்... வேண்டாம் ஒரு அரை மணி நேரம் எனக்காக ஒதுக்கு... போதும்! உன்கூட நான் சந்தோஷமா இருக்கணும்.

வெயிட்... வெயிட்... நான் சொல்லி முடிச்சதுக்கு அப்புறமா நீ கோபப்படு... இதுக்கு நீ சம்மதிக்கலேன்னா... உன் பேரை நான் நாறடிச்சுடுவேன்.

உனக்கும் எனக்கும் ‘கனெக்ஷன்’ இருந்துன்னு.. உன் கணவன்கிட்டேயே நான் சொல்லுவேன். என்னால நீ கெட்டழிஞ்சு போனவள்னும் சொல்லுவேன். அப்புறம் உன் வாழ்க்கை என்னாகும்னு நீயே

தீர்மானிச்சுக்கோ...

உன் கணவன் வேறு ஊர்லே இல்லை. காதும காதும் வச்ச மாதிரி நடந்துகிட்டா... உனக்கும் எந்த பிரச்சினை இல்லை.

நானும் சந்தோஷமா விலகிப் போயிடுவேன். யோசி... நல்லா யோசி... விஷயம் தெரிஞ்சு உன் கணவன் உன் முகத்துல காறித் துப்பி உன்னை வெளியே துரத்துவான்.

வாழாவெட்டியா நீ நடுத்தெருவில நிப்பே... உன் குழந்தையோட எதிர்காலம் என்னாகும்னு யோசிச்சுப் பார்!

உன் தங்கச்சிக்குகூட இன்னமும் கல்யாணமாகலை போல... வாழவெட்டியா நீ உன்னோட பிறந்த வீட்டுக்குப் போய் நிக்கவும் முடியாது.

நான் யாரு பவ்யா? வேத்து மனுஷனா? உன் இதயத்துல இடம் பிடிச்ச முன்னாள் காதலன் தானே?

மனைவிங்கிற அந்தஸ்தோட சமுதாயத்துல நல்ல மதிப்போட நீ வாழணுமா? இல்ல... வாழாவெட்டியா ஊர் வாய்லே புகுந்து புறப்பட்டு அவமானப்பட்டு அல்லல் படணுமா?

நல்ல முடிவா எடுப்பேன்னு நான் நம்பறேன். நாளைக்கு இங்க மறுபடியும் வருவேன்.

இன்னமும் நீ அப்படியே தானிருக்கே... இருந்தாலும் பழைய பவ்யாவா சிரிச்ச முகத்தோட ஃப்ரஷ்ஷா வரவேற்கத் தயாரா இரு... பை! ஸீ யூ" கோணலாய் சிரித்தபடி வெளியேறினான் அரவிந்த்.

கால்கள் பூமியிலேயே வேரோடிப் போய்விட்டதைப் போல... அதிர்ச்சியில் ஸ்தம்பித்துப் போய் நின்றாள் பவ்யா.

வாயடைத்துப் போய் நா மேலண்ணத்தில் ஒட்டிக் கொண்டது. உலகமே தட்டா மாலையாகச் சுழன்றது.

# 11

எரிமலையாய் மனம் குமுறிக் கொண்டிருந்தது.

'இந்த படுபாவியை அன்றைக்கே... பித்தளை ஜாடியால் இன்னமும் நாலு போடு சேர்த்துப் போட்டு கொல்லாமல் விட்டது தப்பாகப் போய் விட்டதே?

அரைகுறையாக அடிபட்ட பாம்பு கொத்தாமல் விடாது என்பார்களே?

விஷத்தைக் கக்க வந்து விட்டானே?

பாப்பாவைத் தூக்கிக்கொண்டு இன்றிரவே ஊர் போய் சேர்ந்து விட்டால் என்ன?

ஊகூம்! இந்த நரிப்பயல் அங்கும் தேடி வந்து விடுவானே? இதற்கு நிரந்தரத் தீர்வே இல்லையா?

ஐயோ... நரேன்! நான் என்ன செய்யப் போகிறேன்? தற்கொலை செய்து கொள்ளலாமா?... குழந்தை தீபிகாவை அம்போ என்று விட்டு விட்டுச் செல்ல முடியுமா?

வளரும் பெண் குழந்தைக்கு தாயின் அரவணைப்பும் அன்பும் கண்டிப்பாக தேவை ஆயிற்றே?

தவமிருந்து பெற்ற குழந்தையை அனாதையாக தாயன்பிற்கு ஏங்கித் தவிக்க வைக்க முடியாதே? சாகவும் முடியாது, வாழவும் முடியாது.

என் வாழ்க்கைக்கு உலை வைக்கத் துணிந்து விட்டானே? அப்பாவிற்கு ஃபோன் செய்து... மனதில் உள்ளதைக் கொட்டி தீர்த்து இந்த அபாயத்திலிருந்து மீள்வதற்குரிய உபாயத்தைப் பற்றி கலந்து ஆலோசித்தால் என்ன?

என்றைக்கு அந்தப் பிசகை செய்து அவருக்கு அவமானத்தைத் தேடி தந்தேனோ... அன்றே அப்பாவின் முகத்தை நேருக்கு நேராய் ஏறிட்டுப் பார்க்கும் தெம்பை இழந்துவிட்டேனே?

கம்பீரமான அப்பாவை தலைகுனிய வைத்து விட்டோமே? என்ற வேதனையில் நிமிர்ந்து பார்க்கக்கூட எனக்கு இன்னமும் கூசுகிறதே?

அம்மாவிடமாவது சகஜமாய் பேசி மனதில் உள்ளதைக் கொட்டி உரிமையாய் அழ முடிகிறது? ஆனால் அப்பாவிடம்...? இத்தனைக்கும் அவரிடம் தானே மிகவும் ஒட்டுதலாய் இருந்தேன்.

காதல் என்ற வலையில் சிக்கி அப்பாவின் மென்மையான மனதை உடைத்து விட்டேனே?

ஊகூம்! அப்பாவிடம் எதையும் சொல்ல முடியாது. சொல்லவும் எனக்கு தெம்பில்லை.

அம்மாவிடம்...? அம்மா நெஞ்சு வலிக்காரி! ஏற்கனவே நான் செய்த பிசகால்... வரன்கள் தட்டிப் போனதால்... கதறி அழுத கண்ணீர் வற்றிப் போன பரிதாபமான ஜீவன்...

அவளை அனாவசியமாய் கலவரப்படுத்த வேண்டுமா? வேதனையில்

## இறப்பில் ஒரு பறப்பு

இறந்தும்
பறக்கும்
தட்டான்;
காற்றில் மிதக்கும்
தன்...
சிறகுகளினூடே...!

- செல்வராஜா

அவளது உடம்புக்கு ஏதாச்சும் வந்துவிட்டால்...?

வேண்டவே வேண்டாம்!

திருமணமாகி விட்டால் ஒரு பெண்ணுக்கு கணவன் தானே கண் கண்ட தெய்வம்? நரேன்... நரேனிடம் அனைத்தையும் கொட்டித் தீர்த்துக் கதறினால் என்ன?

இத்தனை காலமாய் மனமொத்த ஆதர்ஸ தம்பதிகளாய் வாழ்ந்ததற்கு... அவரிடம் கூறி விட்டால் என்ன?

'கணவன் மனைவிக்குள் எந்தவித ஒளிவு மறைவும் இருக்கக் கூடாதுன்னு சொல்வேனே? உன்னோட கடந்த காலத்தைப் பத்தி சொல்லாம இவ்ளோ காலமா ஏன் மறைச்சே பவ்யா?'

இன்னமும் எதை எதை யெல்லாம் என்கிட்டேயிருந்து மறைச்சிருக்கே சொல்லு!

இவ்ளோ பெரிய விஷயத்தை இத்தனை காலமா என்கிட்டே மூடி மறைக்க... உனக்கு எப்படி மனசு வந்தது? இத்தனை காலமா அன்னியோன்யமா நாம்ப வாழ்ந்ததுக்கு என்ன அர்த்தம் பவ்யா?' என்று நரேந்திரன் கேள்விக் கணைகளைத் தொடுத்தால்... நான் என்ன பதில் சொல்வேன்?

ஒருவேளை... விளைவு வேறுவிதமாக இருந்து விட்டால்...?

'ஓடிப் போனவள்... ஒருநாள் இரவு முழுவதும் வெளியில் தங்கிவிட்டு வந்தவள்' என்று ஊரார் தூற்றிக் கதை கட்டியதைப் போல்...

நரேந்திரனும் இவளது நடத்தையில் சந்தேகப்பட்டு, ஒரு கேள்வி கேட்டுவிட்டால் தாங்க முடியுமா?

அந்த நிமிடமே நான் உயிரை விட்டு விடுவேனே?

முருகா! இந்த இக்கட்டிலிருந்து எப்படி தப்பிக்கப் போறேன்?

இந்த அபலையைக் காப்பாத்து!

இல்லேன்னா... இந்த பூமி ரெண்டாகப் பிளந்து என்னை உயிரோட விழுங்கித் தொலைக்கட்டும்.

என்ன செய்யப் போகிறேன் நான்?'

உள்ளூர அழுது புலம்பியபடி குழந்தையைத் தூக்கிக் கொண்டு சைக்கிளை வராண்டாவில் விட்டு... கதவைச் சாற்றினாள்.

செல்ஃபோன் அலறியது. எடுத்து நம்பரைப் பார்த்தாள்.

அப்பா வைத்தீஸ்வரன்!

“ஹலோ பவ்யா! நல்லாயிருக்கியாம்மா? தீபு குட்டி சௌக்கியமா இருக்காளா? சந்தோஷமான சமாச்சாரம் தான்... நம் இனியாவுக்கு நல்ல வரன் வந்திருக்கும்மா...

மாப்பிள்ளை கம்ப்யூட்டர் என்ஜினீயர்... இந்த வரன்கூட நம்ம நரேன் மாப்பிள்ளை மூலமாத்தான் வந்துச்சு... என்ன பேச்சையே காணோம்? மாப்பிள்ளை உன்கிட்ட சொல்லவே இல்லையா?

ரெண்டு பேரும் ஒரே ஆபீஸ் தானாம்... சீர் செனத்தி எதுவும் எதிர்பார்க்லை. ஜாதகம் அனுப்பிச்சாங்க... பொருத்தம் நல்லா இருக்கு.

எல்லாம் நல்லா படியா தகைஞ்சு வர்றதால... வர்ற வைகாசியில நிச்சயம் பண்ணி, கையோட கல்யாணத்தை முடிச்சுடலாம்னு இருக்கோம்.

நரேன் மாப்பிள்ளைக்குத் தான் எவ்ளோ தங்கமான மனசு? அவர் எனக்கு மாப்பிள்ளை இல்லைம்மா... என்னோட மூத்த புள்ளை! அவ்ளோ தான் சொல்லுவேன்.

இனியாவைக் கட்டிக்குடுத்தா என்னோட பாரம் இறங்கிடும். அப்புறம் நம்ம ரகுதானே? இனியா கல்யாணத்துக்கு அப்புறம் மெட்ராஸ் பக்கம் வந்துடுவா... அக்காளும் தங்கச்சியும் கிட்டக்கிட்ட ஒருத்தருக்கொருத்தர் ஆறுதலா இருந்துக்கலாம். இல்லையா?

அம்மாவுக்கும் எனக்கும் மனசுக்கு நிறைவா இருக்கு பவ்யா! மாப்பிள்ளை ஊருக்கு வந்த கையோட குடும்பத்தோட ஒரு நடை இங்க வந்துட்டுப் போம்மா...

நா வச்சுடட்டுமா கண்ணு?” சந்தோஷத்தில் படபடத்துவிட்டு ஃபோனை வைத்துவிட்டார் வைத்தீஸ்வரன்.

இத்தனை கவலையிலும் அவளது மனதில் சின்னதாய் ஒரு சந்தோஷம் எட்டிப் பார்க்கத்தான் செய்தது.

அவளது தங்கை இனியாவுக்காக நரேன் இவ்வளவு மெனக்கெட்டு இருக்கிறாரா?

இது பற்றி அவளிடம் ஒரு வார்த்தைக்கூட சொல்லவில்லையே?

அவளிடம் மட்டுமில்லாமல்... அவளது பிறந்த வீட்டில் உள்ளவர்களிடம் அவன் காட்டிய அக்கறை, கவனம், பரிவு, கரிசனம்... எல்லாவற்றையும்

நினைத்துப் பார்த்தபோது... கண்களிலிருந்து மடை திறந்த வெள்ளமாய் கண்ணீர் பெருக்கெடுத்தது.

'அப்பா ஏதோ சொன்னாரே?

வர்ற வைகாசியல் நிச்சயம் செய்து, கையோடு கல்யாணத்தையும் முடித்துவிடப் போவதாகச் சொன்னாரே?

வைகாசி பிறக்க இன்னமும் நான்கு நாட்கள்தானே இருக்கின்றன.

என்னது இது?

இவர் பிராஜெக்ட் ஒர்க்கை முடித்துவிட்டு எப்போது வரப்போகிறார் என்பது பற்றியே... இன்னமும் தெரியவில்லையே?

வீட்டுக்கு மூத்த மாப்பிள்ளை நரேந்திரன். அதுவும் அவர் மூலமாய் இனியாவுக்கு வாய்த்த வரன் வேறு!

அவர் கல்யாணத்தை முன்னின்று நடத்த வேண்டாமா?

அப்பா என்னவென்றால்... வைகாசியில் கல்யாணம் என்று முடிவாகப் பேசுகிறாரே?

கல்யாணத்திற்குள் நரேந்திரனால் வரமுடியாவிட்டால் என்ன செய்வார்கள்?

அப்பா அவசரப்பட்டு விட்டாரே? அப்பா எப்போதும் ஒரு முறைக்கு நான்கு முறை யோசித்துவிட்டு நிதானமாகச் செயல்படுவாரே?

இருக்கும் கவலை போதாதென்று இதென்ன புதிய குழப்பம்,

நெற்றிப் பொட்டில் ஆள்காட்டி விரலை வைத்து கண்களை இறுக மூடி அப்படியே அமர்ந்துவிட்டாள்.

தலையின் இரு பக்கங்களிலும் வண்டுகள் துளையிட்டு நுழைந்து குடைவதைப் போன்று... வலி 'விண் விண்' என்று தெறித்தது.

"அம்மா! இன்னமும் ஏம்மா அழறே? கண்ணுல மறுபடியும் தூசு பட்டுருச்சாம்மா?" குழந்தை பரிதாபமாய் தாயை ஏறிட்டது.

"இ... இல்லடா கண்ணா! அம்மாவுக்கு லேசா தலைவலி அதான். உனக்கு ஊட்டி விடட்டுமா?" தடுமாறியபடி எழுந்தவள் குழந்தையை வாரி அணைத்துக் கொண்டாள்.

"எனக்கு பயமாருக்கு தீபு! நாளைக்கு விடியப் போறதை நினைச்சாலே... எனக்கு திகிலா இருக்கே?

அறியாத வயசுல தெரியாம செய்த பிசகாலே... நான் இப்போ... ஒரு அனாதை மாதிரி நிக்கிறேனே?

என்னைப் பெத்தவங்ககிட்டேயும் எதுவும் சொல்ல முடியலை. கட்டின கணவர்கிட்டேயும் எதுவும் பேச முடியலை.

நீ மட்டும் பிறக்காம இருந்திருந்தா... இந்நேரம் மருந்தைக் குடிச்சு உசுரை விட்டிருப்பேன்.

மெல்லவும் முடியாம முழுங்கவும் முடியாம... இதென்ன அவஸ்தை? எங்காவது கண் காணாத ஆளரவமற்ற தீவுக்குள்ளே ஓடி ஒளிஞ்சுக்கலாம். போலிருக்கே?

நாளைக்கு நான் எப்படி தப்பிக்கப் போறேன்? சூனாம் மனுஷருக்கு இந்த விஷயம் தெரிஞ்சா... நம்ம குடும்பத்துக்குத் தானே அசிங்கம்?

எனக்கு ரொம்ப பயமாயிருக்கே ஐயோ! என்று வாய்விட்டுக் கதறியழ வேண்டும் போலிருந்தது.

சாப்பிட்டதும் அசந்து தூங்கிப் போனான் குழந்தை.

ஏ.சி. அறையில் கூட வியர்த்து வழிந்தான் பவ்யா. பயத்தில் குழந்தையைக் கட்டிக் கொண்டான்.




'டிக்... டிக்...டிக்...' என்ற இதயத் துடிப்பின் ஓசை கூட மிகப்பெரிய முரசொலியாய் அவளை அச்சுறுத்தியது.

## 12

தோட்டத்து மரங்களில் கூடு கட்டியிருந்த பறவைகள் 'கீச் கீச்' என்று கல கல த்வனி செய்து... உற்சாகமாய் விடியலை வரவேற்றன.

நான்கு மணிக்கே குளித்துவிட்டு பூஜையறையில் விளக்கேற்றிவிட்டு தியானத்தில் அமர்ந்தான் பவ்யா.

இரவு முழுவதும் அழுததில் கண்கள் சிவந்து முகம் வீங்கிக் காணப்பட்டது.

விழிகளிலிருந்த ஜீவன் வற்றிப் போய் விரக்தியும் திகிலும் விரவிக் கிடந்தன.

'நடப்பது நடக்கட்டும். எல்லாம் இறைவன் செயல்' என்று பகவான் மீது பாரத்தைப் போட்டு விட்டு எழுந்து கிச்சனுக்குள் நுழைந்தாள்.

மேடை மீது இறைந்து கிடந்த பாத்திரங்களை... ஒழித்துப் போட்டுவிட்டு... பாலைக் காய்ச்சி முடித்தாள்.

"நான் நாகம்மா வந்திருக்கேன் தாயீ! கதவைத் திற..." உரத்தக் குரல் கொடுத்தபடி... வழக்கம் போல் பின் பக்கத்துக் கதவை ஓங்கித் தட்டினாள் நாகம்மா...

"ஒரு ஜோலியா சிட்டி வரைக்கும் போக வேண்டியிருக்கு தாயீ... சீக்கிரமா வேலையை முடிச்சுட்டு நா ஓடணும். ஆமா... நேத்து உங்க பெரியம்மா மகனைப பார்த்தேனே?

வீடு தெரியாம எங்கிட்ட தான் அந்தத் தம்பி விசாரிச்சாப்பல... உங்க அண்ணன் வீட்டுக்கு வந்துச்சா தாயீ?" ஆர்வமாய் கேட்டாள் நாகம்மா.

'பெரியம்மா மகன்!... அண்ணன்!' பவ்யாவுக்கு குமட்டிக் கொண்டு வந்தது.

"உம்... வந்துச்சு"

நாகம்மா அரை மணி நேரத்தில் தனது வேலையை முடித்துக் கொண்டு கிளம்பி விட்டாள். டைனிங் டேபிளில் தலை சாய்த்து அமர்ந்தாள் பவ்யா.

முப்பது நிமிடங்கள் நகர்ந்திருக்கும். காலிங் பெல் அடிக்கும் ஓசை கேட்டது.

'அவனாகத் தானிருக்கும். கதவைத் திறக்காமலே இருந்து விடலாமா?'

ஊகூம்! அவன் எதற்கும் துணிந்தவன். அக்கம் பக்கத்தினரைத் திரட்டி அவளது பெயரை நாறடிக்கவும் தயங்க மாட்டானே?

காய்கறி நறுக்கும் கத்தியை எடுத்து சேலையில் இடுப்பு மறைவில் சொருகிக் கொண்டாள்.

'நாம் பயந்து ஓடினால்... தெருநாய் கூட நம்மை விடாமல் துரத்தும், துணிந்து நின்று கையை ஓங்க ஆரம்பித்தால்... நாய் பதுங்கி பம்மி பின்வாங்கி ஓடி விடும்' என்று எந்தப் பத்திரிகையிலோ முன்பு படித்த

ஞாபகம் வந்தது.

'இத்தனை காலமாய் இவனுக்கு பயந்து செத்தது போதும்! இந்த திகிலுக்கும் பயத்திற்கும் இன்றோடு முற்றுப்புள்ளி வைத்து விட வேண்டியது தான்!'

கதவைத் திறந்தாள் பவ்யா.

அரவிந்த் வாயெல்லாம் பல்லாக நின்று கொண்டிருந்தான்.

சட்டென்று உள்ளே புகுந்து சோபாவில் அமர்ந்து கால் மேல் கால் போட்டுக் கொண்டான்.

"நல்ல முடிவெடுத்திருக்கேன்னு நினைக்கிறேன். கதவை தாழ் போட்டுட்டு வா பவ்யா"

கதவை அகலத் திறந்து வைத்த பவ்யா திரும்பிப் பார்த்தாள்.

"நல்ல முடிவுதான் எடுத்திருக்கேன். முதல்லே அதைப் பத்தி பேசிடலாமா?" என்ற படியே நடந்து வந்தாள்.

"பேசு, பவ்யா... பேசு! இன்னிக்கு நீ ரொம்பவே அழகா இருக்கே தெரியுமா?" அவளை ஏற இறங்க அளவெடுத்தான்.

"பேசறேன்டா... பேசறேன். இத்தனை வருஷமா நான் செத்து செத்துப் பிழைச்சேன்டா... சந்தோஷமான வாழ்க்கை கிடைச்சிருந்தும்... உன்னைப் போய் விரும்பித் தொலைச்ச பாவத்தை எண்ணி எண்ணி நான் வெம்பினது போதும்!" என்றபடி இடுப்பிலிருந்த கத்தியை எடுத்தாள்.

"நான் செஞ்ச புண்ணியம் எந்தக் கறையும் படாம தப்பிச்சேன். எத்தனையோ அப்பாவி பொண்ணுங்களை ஏமாத்தி தாலி கட்டி நரகத்துல தள்ளினது போதாதுன்னு... இப்போ உன் வேலையை ஊரார் மனைவிகிட்டேயும் காட்ட ஆரம்பிச்சுட்டியா?

அன்னிக்கு உன்னை அரைகுறையா விட்டது தப்புடா! மண்டையில ஓங்கி அடிச்சு கபாலத்தைப் பொளக்காம விட்டேன் பாரு! அது என் தப்புடா!

என் பேரை நாறடிக்கப் போறியா? அதுக்கு நீ உயிரோட இருந்தாத் தானே? நான் துணிஞ்சுட்டேன்டா ராஸ்கல்...

என்ன சொன்னே? உன் ஆசைக்கு இணங்கணுமா? பொறுக்கி! இன்னிக்கோட நீ இந்த உலகத்தை விட்டே போயிடுடா ராஸ்கல்"

ஆடிப் போய்விட்டான் அரவிந்த். குடும்பப் பெண்ணை பிளாக் மெயில்

## யோசனை

**டி**.வி.யின் மீது எக்காரணம் கொண்டும் தண்ணீர் படக்கூடாது. நீர் உள்ளே போய்விட்டால் மின்சாரம் தாக்கி பிக்சர் டியூப் வெடிக்கும் அபாயம் உண்டு.

**தே**ங்காயை சிறிது நேரம் வெண்ணீரில் ஊற வைத்து நடுவில் தட்டி உடைத்தால் சமமாக உடையும்.

**ந**ன்றாகக் காய்ந்த நெல்லிக் காய்களை இரவில் தண்ணீரில் ஊறப்போட்டு காலையில் அந்தத் தண்ணீரால் கண்களைக் கழுவினால் கண்நோய் அகலும்.

**ஒ**ரு தம்ளர் தண்ணீரில் ஒரு ஸ்பூன் தேன் கலந்து குடிக்க விக்கல் நிற்கும்.

- ஹரிஹரன்.

செய்தால்... நல்ல வாழ்க்கை பறி போய்விடும்என்றபயத்தில்... அவனது ஆசைக்கு அவள் கட்டாயம் இணங்கி விடுவாள் என்ற நப்பாசையிலும் நம்பிக்கையிலும் குஷியாய் கிளம்பி வந்து விட்டிருந்தான்.

ஸ்நானம் செய்த கூந்தல்...! கோபா வேசத்தில் கோவைப் பழமாய் தகதகத்த அகன்ற விழிகள்... கைகளில் கூரிய கத்தியுடன் நடந்து வந்து அருகில் நின்றவளைப் பார்க்கவே பயமாய் இருந்தது.

எதிர்பாராத அதிர்ச்சியில் அவனுக்கு ஓடக்கூட திராணியில்லை.

"ப...பவ்யா! விளையாடாதே...! என்னைப் பத்தி உனக்கு நல்லாத் தெரியுமில்ல..." பேசியபடி அவளது கையிலிருந்த கத்தியை தட்டிவிடப் பார்த்தான்.

"தெரியும்டா! பெண்மையைப் புழுவை விடக் கேவலமா நினைக்கிற ஈனப் பிறவின்னு... நல்லாவே தெரியுமேடா பொறுக்கி" உறுமிய படி கையிலிருந்து கத்தியை லாவகமாக இறுகப் பிடித்துக் கொண்டு.. தட்டிவிடப் பார்த்த அவனது கையில் ஒரு கீறல் கீறினாள்.

"உஸ்... அம்மா... அம்மா...ஆ" வலியில் அலறினான்.

"உம்... கூப்புடு... உன்னைப் பெத்தவளைக் கூப்பிடுடா... அவளும் ஒரு பெண் தானே? உன்னைப் பத்தின விவரம் அவளுக்குத் தெரிஞ்சதுன்னா... நீ சாப்பிடற சாப்பாட்டுலே விஷம் கலந்து உன்னைக் கொன்னு போட்டுட்டுத்தான் மறுவேலை பார்ப்பா...

பிளாக் மெயிலா பண்றே? யூ பிளடி ஸ்கௌண்ட்ரல்"

விரித்த கூந்தலுடன் கண்களை உருட்டி வெறி கொண்டவளைப் போல் கத்தியை ஓங்கியவளைப் பார்க்கும்போது... அந்த ஆதிபராசக்தியே இறங்கி வந்துவிட்டாற் போலிருந்தது.

"பவ்யா! பவ்யா...! அவனை

விட்டுரு... அவனை விடும்மா... நான் பாத்துக்கிறேன்" என்ற குரலைக் கேட்டதும் குபீரென்று அதிர்ந்து பின்னால் திரும்பிப் பார்த்தாள்.

நரேந்திரன் வாசற் படியைத் தாண்டி வந்து கொண்டிருந்தான்.

'இவர்... இவர் எப்படி வந்தார்? பிராஜெக்ட் வேலை முடிந்துவிட்டதா? ஃபோனில் எதுவும் சொல்லவில்லையே?'

போச்சு... எல்லாம் போச்சு! இந்தப் பாவி சும்மா இருக்க மாட்டானே? கண்டதையும் சொல்லி அவர் மனதில் விஷமேற்றி விடுவானே?'

இனம் புரியாத கலவரத்தில் கண்ணை இருட்டிக் கொண்டு வர... தள்ளாடிய படி நாற்காலியில் பொத்தென்று அமர்ந்தாள்.

"நீங்கதான் இவளோட ஹஸ்பெண்டா? உங்களைத் தான் பார்க்கணும்னு நினைச்சேன்.

இவ என்னோட காதலி! எனக்காக வீட்டை விட்டு ஓடி வந்தா... கணவன் மனைவியா ஒருநாள் நாங்க வாழ்ந்திருக்கோம்.

சந்தர்ப்ப வசத்தால நாங்க பிரிஞ்சிட்டோம். நீங்க இல்லாத நேரத்துல அப்பப்போ நாங்க சந்திக்கிறதுண்டு...

இனிமே நீ இன்னொருத்தர் மனைவி... நாம்ப மீட் பண்றது சரியில்லைன்னு சொன்னேன். இவதான் ஃபோன்லே வற்புறுத்தி என்னை வரவழைச்சா...

பழசை மறந்துடுன்னு கண்டிச்சேன். அதுக்குப் போய் இவ்ளோ கோபப்பட்டு கத்தியால என் கையில கீறிட்டா..." அரவிந்த் வாய் கூசாமல் பிளேட்டை அப்படியே திருப்பிப் போட்டு விட்டான்.

நரேந்திரன் ஆறடி உயரத்தில் ஆஜானுபாகுவாய் இருக்கும் மனிதன். நரசிம்மம் வந்து இறங்கி விட்டதைப் போல் அவனுக்குள் ரௌத்திரம் பொங்கியது. அரவிந்தின் சட்டையை இறுகப் பிடித்தான்.

கையை இழுத்து ஐந்தாறு அறைகள் விட்டான். முஷ்டியால் ஓங்கி வயிற்றிலும் மூக்கிலும் குத்தினான்.

சில்லு மூக்கு உடைந்து ரத்தம் கொட கொடவென்று கொட்டியது.

"என்ன தைரியம் இருந்தா.. நானில்லாத நேரத்துல வீட்டுக்குள்ளே காலை வைப்பே?

உன்னைப் பத்தி ஏற்கனவே எல்லா விவரமும் தெரியும்டா... என் மனைவி மேல சேத்தை வாரி இறைக்கிறியே... உனக்கு எவ்ளோ நெஞ்ச

மூத்தம் இருக்கணும்?

அவ கோபத்துல பேசினதை எல்லாம் கேட்டுக்கிட்டுதான்டா உள்ளே வந்தேன்.

உன் ஆசைக்கு இணங்கச் சொல்லி... அவகிட்டே பிளாக்மெயில் பண்றியா?" முழங்காலை மடக்கி அவனது அடி வயிற்றில் இடி போல் இறக்கினான்.

"உன் தைரியத்தை என்கிட்டே காட்டேன். பொட்டைப் பயல் மாதிரி பொம்பளைகிட்ட வீரம் காட்ட வந்தியா?

இனிமே 'பவ்யா'ங்கிற பேரைக்கூட நீ உச்சரிக்கவே கூடாது. அவ இருக்கிற பக்கமே தலைவச்சுப் படுக்கக்கூடாது. இனிமே எந்தப் பொண்ணுகிட்டேயும் வாலாட்டக் கூடாது. வாடா கமிஷனர் ஆபீசுக்குப் போகலாம். வா..." அவனது காலரைக் கொத்தாகப் பற்றி இழுத்துக் கொண்டு போனான்.

"சா... சா... சார்! என்னை மன்னிச்சுடுங்க... விட்டுருங்க... இனிமே யார் கண்ணுலேயும் நான் படவே மாட்டேன்.

நம்புங்க... மன்னிச்சு விட்டுருங்க... நான் செஞ்ச தப்புக்குத் தான் உங்க மனைவி தகுந்த தண்டனை குடுத்துட்டாங்களே? கையில பாருங்க சார்... ரத்தம் கொட்டிட்டு இருக்கு... ப்ளீஸ் விட்டுருங்க சார்!" கெஞ்சி மன்றாடினான்.

ஆத்திரம் அடங்காமல் மீண்டும் இரண்டு அறைகளை கன்னத்தில் இடிகளாய் இறக்கிவிட்டு... தனது பிடியைத் தளர்த்தினான்.

"இந்த ஏரியாப் பக்கம் எங்காச்சும் நீ திரிஞ்சுட்டிருந்தே... மறுநாள் உயிரோடவே இருக்கமாட்டே... ஜாக்கிரத்தை"

நாலே பாய்ச்சலில் தோட்டத்தைத் தாண்டி ஓடிப் போனான் அரவிந்த்.

கண்ணீரும் கம்பலையுமாக கணவனை ஏறிட்டாள் பவ்யா.

"ந... நரேன்! கல்யாணத்துக்கு முன்னாடி நான் கம்ப்யூட்டர் கிளாசுக்குப் போயிட்டிருந்தேன். இந்தப் பாவி என்கிட்டே தன் காதலைச் சொன்னான்.

முதல்லே நான் சம்மதிக்கலே... தூக்க மாத்திரை சாப்பிட்டு தற்கொலைக்கு முயற்சி பண்ணினதா நாடகமாட்டிட்டான். இரக்கப்பட்டு நானும் காதலிச்சுட்டேன்..."

“அது காதல் இல்ல... ஜஸ்ட் ஒரு இன்ஃபாச்சுவேஷன்... இந்த விஷயத்தை எல்லாம் உன்னைப் பொண்ணு பார்க்க வந்தப்பவே என்கிட்ட உங்கப்பா சொல்லிட்டாரே?”

“சொல்லிட்டாரா?... புத்தி கெட்டுப் போயி வீட்டைவிட்டுப் போனேன். தற்செயலா இவனுக்கு வந்த ஃபோனை அட்டெண்ட் பண்ணினப்போ... இவனைப் பத்தி தெரிஞ்சு இவனை அடிச்சுப் போட்டுட்டு தப்பிச்சேன்.

இவனோட சகாக்கள் துரத்தினாங்க... சேரியில இருக்கிற ஒரு குடிசைக்குள்ளே புகுந்தேன். ஒரு பாட்டிம்மா எனக்கு அடைக்கலம் தந்தாங்க... நான் களங்கமில்லாதவள் நரேன்! வேணும்னா நீங்க அந்த பாட்டிம்மா கிட்ட வந்து...”

“போதும் பவ்யா! உன்னைப் பத்தி நான் அவங்கிட்டே கேட்டுத்தான் தெரிஞ்சுக்கணுமா? உண்மையை மறைக்காம சொன்ன உங்கப்பாவோட நேர்மை எனக்குப் பிடிச்சிருந்தது.

உன்னைக் கட்டிக்க சம்மதிச்சுட்டேன். தொட்டுத் தாலி கட்டின கணவன் கிட்ட கூட அன்னியோன்யமா இருக்க முடியாம... ஆரம்பத்துல காய்ச்சல்லே விழுந்து துடியாய் துடிச்சியே..

உன்னைப் பத்தி எனக்குத் தெரியாதா?...”

“அப்பா உங்ககிட்டே பழசைப் பத்தி எதுவும் பேசக்கூடாதுன்னு சொல்லிட்டாரு.. எப்பேர்ப்பட்ட உத்தமர் நீங்க... உங்களுக்கு நான் மனைவியா இருக்கத் தகுதி உடையவள் தானா?ன்னு உள்ளுக்குள் மருகிட்டே இருக்கேன்.

கல்யாணத்துக்கு முன்னால எந்தப் பொண்ணும் காதல் வலையில சிக்கக்கூடாது. சிக்கினா... என்னைப் போல் மனசுல நெருஞ்சி முள்ளா குத்தற உறுத்தலோட கிடந்து தவிக்க வேண்டியதுதான். இது ஒரு பெரிய படிப்பினைங்க...”

“இத்தனை வருஷமா பைத்தியக்காரி மாதிரி உள்ளுக்குள்ளே மருகினது போதும். இனிமே எந்த உறுத்தலும் இல்லாம சந்தோஷமா சகஜமா இருக்கணும்... நீ ஒரு ஆகாய கங்கை பவ்யா! நீ எந்த அப்பழுக்கும் இல்லாதவள்னு.. நான் பூரணமா நம்பறேன். போதுமா?”

“மைகாட்! எப்படிப்பட்ட உயர்ந்த உள்ளம் உங்களுக்கு... இது புரியாம... நான்... நம்ம தீபு குட்டி மட்டும் இல்லேன்னா மருந்தைக் குடிச்சு செத்திருப்பேன். தெரியுமா?

## உயிர் பூசு

**எ**ண்ணத்தின் நிறமென்ன
என்றே எண்ண;
என்னுள்ளே எண்ணங்கள்
எளிதாய் மின்ன...

வண்ணத்தின் குணமொன்றை
வாதம் பண்ண;
வலிதாக நிறம்மாறும்
எதுதான் பண்ண?

அன்னத்தின் சூடெல்லாம்
பாலை உண்ண;
அருந்திட்டு அதைச் சேர்ந்த
நீரை நீர்த்து...

உண்ணத்தான் எண்ணத்தான்
சொன்னால் என்ன...
உள்ளார்த்தம் கொள்ளத்தான்
உணர்ந்தால் என்ன

துன்பத்தின் நிறமென்ன
துடிப்பாய் எண்ண;
துய்க்கின்ற இன்பத்தை
பொய்யாய்ச் செய்து
கண்பொத்திக் கொள்கின்ற
காயம் என்ன
களிம்பாக்கி உயிர்பூசும்
மாயம் என்ன!

- தமிழ்நாயகி

இந்த இக்கட்டுல இருந்து எப்படி தப்பிக்கப் போறோம்னு ஒவ்வொரு நிமிஷமும் பயந்து செத்து... கடைசியா தைரியத்தைத் திரட்டிக்கிட்டு கத்தியைத் தூக்கிட்டேன்"

"கடைசி நிமிஷத்திலாவது தைரியம்வந்துச்சே...பாராட்டுறேன் அன்னிக்கு என் மனசு சரியில்லை பத்திரமா இருங்கன்னு... ஃபோன்ல சொன்னேன் இல்லையா? ராப்பகலா கண் முழிச்சு பிராஜெக்ட்டை முடிச்சேன். உடனே ஃபிளைட் டிக்கட்டுக்கு ஏற்பாடு பண்ணினேன்.

உனக்கு சர்ப்ரைஸா இருக்கட்டும்னு தான்... நான் வரப் போறதை சொல்லலை... ஆனா மாமாவுக்கு ஃபோன்ல சொல்லிட்டேன். நம்ப இனியாவுக்கு கல்யாண வேலைகள் ஜரூரா நடந்துட்டிருக்கு போல...?

சித்தப்பா எனக்காக பேங்கில விட்டுச் சென்ற சில லட்சங்கள்... அப்புறம் நாம்ப சேமிச்சது... எல்லாத்தையும் வச்சு சுயமா ஒரு சாஃப்ட்வேர் கம்பெனி ஒண்ணு ஆரம்பிக்கப் போறேன்.

இனிமே உங்களைப் பிரிஞ்சு வெளியூருக்கோ... வெளி நாட்டுக்கோ நான் போகவே மாட்டேன். இந்த வேலையை விட்டுட்டு சொந்தக் கால்லே நிக்கிற தோடு.. நாமளே மத்தவங்களுக்கும் வேலைவாய்ப்பு தரலாம். இல்லையா?

எல்லாம் சரி! மருந்தைக் குடிச்சு செத்திருப்பேன்'னு சொன்னியே? நியாயமா, என்னுயிரே நீதானே பவ்யா? என்னை எப்படி நீ மறந்தே? உன்னை நான் எந்தளவுக்கு நேசிக்கிறேன். தெரியுமா?" அவளது விழிகளை ஆழமாக ஊடுருவினான்

நரேந்திரன்.

"ஸா... ஸாரி நரேன். நானும் உங்களை உயிருக்கும் மேலா நேசிக்கிறேன். உங்களை என் தெய்வ மாகவே மதிக்கிறேன்" சட்டென்று கால்களில் பணிய முற்பட்டவளைத் தூக்கி நிறுத்தினான்.

"நான் தெய்வமுமில்ல... பூதமுமில்ல... நீ கால்லே விழத் தேவையில்ல பவ்யா...! நீ என்னோட பெட்டர் ஹாஃப்! என்னில் சரி பாதி...! என்னுயிர் போதுமா?" முறுவலித்தபடி வந்தாள் தீபு.

"ஹாய் டாடி... என்ன வாங்கிட்டு வந்தீங்க?"

"நிறைய டாய்ஸ் வாங்கியிருக்கேன். புது ட்ரஸ்கூட இருக்கு" என்றபடி வாரி அணைத்துக் கொண்டான்.

"ப்ச்... டாய்ஸ் வச்சு தனியா விளையாடி விளையாடி போர் அடிக்குதுப்பா... ப்ரீ கேஜியில் என்கூட படிக்கிற பசங்களுக்கு எல்லாம் தம்பி தங்கை பாப்பாக்கள் இருக்காங்க... எனக்குத் தான் இல்ல... விளையாட யாருமே இல்லாம சுத்த போர் அடிக்குது" குழந்தை ஏகத்திற்கும் சலித்துக் கொண்டது.

"நான் கடைசியா ஃபோன்ல பேசினப்போ கூட தீபு குட்டி இதையே தான் சொன்னா... 'சரிடா கண்ணா! அப்பா ஊருக்கு வந்ததும் ஒரு குட்டிப் பாப்பாவுக்கு ஏற்பாடு பண்ணிடலாம்னு வாக்குறுதி குடுத்தேன். நீ என்ன சொல்றே பவ்யா?" வேண்டுமென்றே முகத்தை சீரியஸாய் வைத்துக் கொண்டு அவன் கேட்ட விதம்... குபீரென்று சிரிப்பை வரவழைத்து.

நாணத்தில் முகம் குங்குமமாய் சிவக்க... நேசமாய் கணவனை ஏறிட்டாள்.

"யூ... நாட்டி! உங்க பொண்ணுக்கு... உங்க மாமாவுக்கு எல்லாருக்கும் நீங்க வரப்போறது தெரிஞ்சிருக்கு. நான் ஒரு தத்தி!

நான்தான் உங்களை சரியாப் புரிஞ்சுக்கலை போல... சரி! உங்களுக்குப் பிடிச்ச வெங்காய சாம்பாரும் மல்லித்துவையலும் இட்லியும் செய்துடறேன்" பேசியபடி அடுக்களைக்குள் அவசரமாய் நுழைந்தாள் பவ்யா.

இது காலம் வரை மனதிலிருந்த பாரம் இறங்கி... இறகு போல் மனம் லேசாக... நிரந்தரமாய் ஒரு குட்டி முறுவல், அவளது அழகிய இதழ்களில் பூத்தது.

☆ முற்றும் ☆